விலை ரூபா: 5.00    பக்கங்கள் :- பத்து    Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI







சங்கு 03    வள்ளுவர் ஆண்டு 2033    ஆடி 15    புதன்கிழமை (31.07.2002)    தொலைபேசி 3378    ஒலி 224


## அரசின் சமாதான முயற்சியை வரவேற்கிறேன்

# நாட்டை பாதுகாக்க முப்படையும் தயார் நிலையில் இருக்க வேண்டும்

### விருது வழங்கும் வைபவத்தில் ஜனாதிபதி உரை

(நமது நிருபர்)

**இலங்கையின் இனப்பிரச்சினை தீர்விற்கு அரசும் விடுதலைப்புலிகளும் இணைந்து சமாதான முயற்சியினை மேற்கொண்டாலும் எதனையும் சமாளிக்கக்கூடிய வகையில் முப்படையினரும் தயாராக இருக்க வேண்டும்.**

**சமாதான சூழ்நிலையிலும் நாட்டின் பாதுகாப்பு முப்படையினரிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. முப்படைகளின் தலைமைத் தளபதியாக இருக்கும் நானும், பிரதமரும், அரசாங்கமும் இது தொடர்பாக தேவையான எதனையும் செய்வதற்கு தயாராக உள்ளோம்.**

பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற படைவீரருக்கான வீர விருதுகள் வழங்கும் வைபவத்தில் விருது வழங்கி கௌரவித்து பேசும்போதே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இவ்வைபவத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன மற்றும் அமைசசர்களும், முப்படைத் தளபதிகளும் கலந்து கொண்டார்கள்.

ஜனாதிபதி அங்கு தொடர்ந்து பேசுகையில்:

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு கடந்த அரசும் யுத்தத்தை விடுத்து அரசியல் தீர்வு காணமுற்பட்டது. இந்நிலையில் தற்போதைய அரசாங்கம் மேற்கொண்டுவரும் சமாதான முயற்சிகளை வரவேற்கின்றேன். நாட்டில் உள்ள சகல சமூகங்களின் உரிமைகளை பாதுகாக்கும் அரசியல்

(10ம் பக்கம் பார்க்க)

## கண்ணி வெடி அகற்றும் பணி மேலும் 2 மாதங்கள் நீடிப்பு

### அமெரிக்க தூதரகம் அறிவிப்பு

(கொழும்பு)

குடாநாட்டில் கண்ணிவெடிகளை அகற்றும் அமெரிக்க குழுவினரின் பணி மேலும் இரண்டு மாதஙகளினால் நீடிக்கப்பட்டுள்ளதாக கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் அறிவித்துள்ளது.

கடந்த ஏப்பிரல் மாதம் ஆரம்பிக்கப்பட்ட கண்ணிவெடி அகற்றும் பணி மூன்று மாதங்கள் வரை தொடரும் என முன்னா் அறிவிக்கபபட்டிருந்தது.

எனினும் குடாநாட்டில் புதைக்கப்பட்டுள்ள பெருமளவான வெடிபொருட்கள் இன்னும் அகற்றப்பட வேண்டியுள்ளதால் கண்ணிவெடி அகற்றும் பணி மேலும் இரண்டு மாதங்களினால் நீடிக்கப்பட்டுள்ளது என அமெ ரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது.

(10ம் பக்கம் பார்க்க)

### வாள்கள், கத்திகள் சகிதம்

## வடமராட்சி மீனவர்களை அச்சுறுத்தும் இந்திய மீனவர்கள்

(மந்திகை)

வடமராட்சி கடற்பரப்பில் தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் அச்சம் காரணமாக நேற்று முன்தினம் தொழிலில் ஈடுபடாது கரை திரும்பியுள்ளனர்.

வடமராட்சி கடற்றொழிலாளர்கள் மீன்பிடிக்க கடலுக்குச சென்ற வேளை அங்கு றோலர்களில் நின்று மீன்பிடித்துக் கொண்டிருந்த இந்திய மீனவர்கள் கத்தி மற்றும் வாள்களைக் காட்டி தம்மை மிரட்டியதால் தாம் கரை திரும்பியதாக மீனவர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீன்பிடித் தடை நீக்கப்பட்டு கடலில் சுதந்திரமாக தொழில் செய்யலாம் என கடலுக்கு சென்றால்

(10ம் பக்கம் பார்க்க)

## மட்டு எம்பியின் பாதுகாப்புப் பொலிஸார் துப்பாக்கிச் சூடு!

### ஆறு இளைஞர்கள் காயம்

(மட்டக்களப்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரின் வீட்டுக்கு முன்னால் 10 பேர் கொண்ட இளைஞர் குழு ஒன்று பொல்லுகள், தடிகள் சகிதம் ... தாகவும் அவர்களை அங்கிருந்து விரட்டுவதற்காகவே தாம் துப்பாககிப் பிரயோகம் மேற்கொண்டதாக

காரணமாக நேற்று முன்தினம் தொழி லில் ஈடுபடாது கரை திரும்பியுள்ள னர்.

வடமராட்சி கடற்றொழிலாளர்கள் மீன்பிடிக்க கடலுக்குச சென்ற வேளை அங்கு றோலர்களில் நின்று மீன்பிடித் கரை திரும்பியதாக மீனவர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீன்பிடித் தடை நீக்கப்பட்டு கட லில் சுதந்திரமாக தொழில் செய்ய லாம் என கடலுக்கு சென்றால்

(10ம் பக்கம் பார்க்க)

# 13 விடுதலைப்புலிகள் நேற்று எழுவை தீவுக்குச் சென்றனர்

## மக்கள் பட்டாசு கொளுத்தி வரவேற்பு

(ஊர்காவற்றுறை)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அர சியல் பிரிவினர் நேற்று அரசியல் பணிகளை மேற்கொள்வதற்காக எழுவைதீவிற்குச் சென்றனர்.

பன்னிரண்டு வருடங்களின் பின் அங்கு சென்ற புலிகளின் அரசியற் பிரமுகர்களை அப்பகுதி மக்கள் பட்டாசு கொளுத்தி அன்புடன் வர வேற்றனர்.

எழுவைதீவு றோமன் கத்தோ லிக்க பாடசாலையில் புலிகளின் பிரமுகர்களை வரவேற்கும் வரவேற் புக் கூட்டம் பாடசாலை அதிபர் எம். சத்தியசீலன் தலைமையில் நடை பெற்றது.

இதேவேளை தீவக அரசியல்

(10ம் பக்கம் பார்க்க)

# ஆறு இளைஞர்கள் காயம்

(மட்டக்களப்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தங்கவடிவேலின் பாது காப்புக் கடமையிலிருந்த பொலிஸார் நேற்று முன்தினமிரவு மேற் கொண்ட துப்பாக்கிப் பிரயோகத் தில் 6 இளைஞர்கள் காயமடைந் தனர்.

மட்டக்களப்பு ஆரையம் பதியில் உள்ள மேற்படி பாராளுமன்ற உறுப்பினரின் வீட்டுக்கு முன்னால் 10 பேர் கொண்ட இளைஞர் குழு ஒன்று பொல்லுகள், தடிகள் சகிதம் அட்டகாசம் புரிந்ததுடன் வீட்டிற்கு வெளியே நிறுத்திவைக்கப்பட்டிருந்த வாகனத்தை அடித்து நொருக்கிய தாகவும் அவர்களை அங்கிருந்து விரட்டுவதற்காகவே தாம் துப்பாக கிப் பிரயோகம் மேற்கொண்டதாக வும் பொலிஸார் தெரிவித்துள் ளனர்.

(10ம் பக்கம் பார்க்க)

**உள்ளே!**

தரம் 5 புலமைப் பரீட்சை மாணவர்களுக்கான ஆர ம்ப விஞ்ஞானக் கேள்வி கள் 100.

# தச்சனாமடு படுகொலை

## 11 சந்தேக நபர்கள் கைது

(வவுனியா)

மன்னார் தச்சனாமடுப் பகுதியில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் 11 பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மற்றொரு சந்தேக நபரைத் தேடி பொலிஸார் வலை விரித்துள்ளனர்.

வவுனியா பொலிஸாரும் சீதுவை பொலிஸாரும் இணைந்து மேற் கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது சந்தேக நபர்கள் 11 பேரும் சீதுவையில் வைத்து கைது செய்யப் பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட அனைவரும் சீதுவையில் இருந்து வவுனியாவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளனர். அதே

(10ம் பக்கம் பார்க்க)

ஹற்றன் நஷனல்

சுபாசிறி

சொந்த தேவைகளுக்கான கடன் திட்டம்

உங்களுக்கென்றே வடிவமைக்கப்பட்ட, உங்கள் தேவைகளுக்கெல்லாம் கைகொடுக்கும் தனிப்பட்ட கடன் திட்டம்

இதோ! உங்கள் உற்றதுணையான சுபாசிறி கடன் பற்றிய விபரங்கள்

* ரூ. 25,000/- முதல் ரூ 400,000/- வரை கடன் வசதி பெறலாம்
* மூன்று வருடங்கள் வரை மீளச் செலுத்தும் வசதி
* கவர்ச்சிகரமான வட்டி வீதம்
* எழுத்து வேலைகள், பத்திரப்படுத்தல்கள் குறைவு

மேலதிக விபரங்களுக்கு HNB யாழ்ப்பாணக் கிளையை நாடுங்கள்

ஹற்றன் நஷனல் வங்கி
உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

யாழ்ப்பாணக் கிளை
இல. 212, 214, ஆஸ்பத்திரி வீதி,
தொலை பேசி :- 021 - 2787, 021 - 3463
தொலை நகல் :- 021 - 3194,

[C/4634]

## சிறு விளம்பரம்

### வீட்டுப் பொருட்கள் விற்பனை

நீர்வேலிப் பிரதேசசபைக்கு வடக்கில் அமைந்த வீட்டில் எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் (03. 08, 04.08) அலுமாரி, தளபாடங்கள், பித்தளைப் பாத்திரங்கள், பெரியசாடிகள், போக்கல்கள் விற்கப்படும் (5759)

### கட்டட வேலைகள் பூர்த்தி

(மானிப்பாய்)

வலிமேற்கு வட்டுக்கோட்டை இந்துவாலிபர் சங்கத்தின் புதிய கட்டிட வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

(உ-232)

# பனைவளத்தை நம்பி வாழும் சமூகங்கள் நிர்க்கதி நிலையில்

## பனை அபி.சபைத்தலைவர்பொ.சிவபாதம்

(யாழ்ப்பாணம்)

யுத்தத்தினால் பனை தென்னைகள் அழிக்கப்பட்டதால் அவ்வளத்தை நம்பிவாழும் சமூகங்கள் பெரிதும்பாதிக்கப்பட்டுள்ளன இன்று அவர்கள் தொழில் வளங்களை இழந்த நிலையில் விரத்தியின் விளிம்புக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இவ்வாறுகவலை வெளியிட்டுள்ளார் பனைஅபிவிருத்திச்சபைத்தலைவர் பொ.சிவபாதம்.

அவர் இவ்விடயம் பற்றி மேலும் தெரிவித்ததாவது பனை அபிவிருத்திச்சபை உற்பத்தியாளர்களின் அயராத உழைப்பினால் பொதுமக்களுக்குச்சேவையாற்றிவருகிறது எமதுசபையை தேசிய மட்டத்திற்கு உயர்த்தி பனைவளத்தை நம்பிவாழும்சமூகங்களின் தேவைகளை நிறைவுசெய்ய நிதிநிலைமையும் ஒரு முட்டுக்கட்டையாக வுள்ளது.

அரசு மானியம் அனுப்புவதை நிறுத்தியுள்ளது எனவே நிதிப்பிரச்சினையை நிவர்த்தி செய்யும் நோக்குடன் எமது உற்பத்திப் பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறோம்.

இருந்தும் எமது அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கு நிதிப்பற்றாக்குறை தடையாகவே இருந்து வருகிறது. எவ்வாறெனினும் சபையின் நடவடிக்கைகள் மக்கள் நலன் சார்ந்ததாகவே இருக்கும் என்றார்.

(ஷ-6)

## விண்ணப்பித்த பாடசாலையில் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 10ஆம்திகதி நடைபெறவுள்ள தரம்5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு வேறுமாவட்ட பாடசாலையில் இருந்து விண்ணப்பித்து தற்போது யாழ்மாவட்ட பாடசாலையில் கல்விகற்கும் மாணவர்களை அவர்கள் பரீட்சைக்கு விண்ணப்பித்த பாடசாலையிலேயே பரீட்சை எடுக்க வேண்டுமென அறிவிக்கப் பட்டுள்ளது. (உ)

## விடுமுறை

(வண்ணார்பண்ணை)

யாழ்ப்பாண உயர்தொழில் நுட்ப நிறுவனம் முதலாம் பருவ விடுமுறைக்காக கடந்த சனிக்கிழமைமூடப்பட்டு மீண்டும் ஒகஸ்ட் 12 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

(உ-109)

# வன்முறை எண்ணத்தோடு கராத்தே பயில்வது தவிர்க்கப்பட வேண்டும்

## பேராசான் ஷிகான் பொணி றொபேட் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எந்தக் கலையையும் கற்றுக்கொள்ளும் போதும் பணிவு, தன்னடக்கம், குருபக்தி, பொறுமை ஆகிய நற்குணங்களும்அவசியம். அப்போதுதான் அக்கலையை பூரணமாகக் கற்றுப்பிரகாசிக்க முடியும். இது கராத்தேக்கலைக்கும் பொருத்தமானதாகும்.

கராத்தே தற்பாதுகாப்புக் கலையின் ஸ்தாபகரானபேராசான் ஷிகான் பொணி றொபேட்,கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் கராத்தே பயிற்சி முகாமைத் தொடக்கி வைத்து உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வு ஆசான் ரஞ்சித் சைலேந்திரகுமார் தலைமையில் இடம்பெற்றது.

பேராசான் ஷிகான்பொணி றொபேட் தொடர்ந்து உரையாற்றும் போது, யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை கராத்தேக் கலையைக் கற்றுக்கொள்வதற்கு இளைஞர்கள் ஆர்வமாகவுள்ளனர்.ஆனால், தற்பொழுது யாழ்ப்பாணத்தில் பயிற்றப்படும் கராத்தேயில் சில வழுக்கள் காணப்படுகின்றன.இதனை ஆசான்கள் நிவர்த்தி செய்யவேண்டும்.

கொழும்பிலும் ஏனைய பிரதேசங்களிலும் பெற்றோர் தமது பெண் பிள்ளைகளுக்கு தற்பாதுகாப்புக் கலைகளைப் பயிற்றுவித்து வருகின்றனர். ஆனால் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை ஒருசிலபெண் பிள்ளைகளே தற்பாதுகாப்புக் கலையை பயில்கின்றனர். இந்நிலை மாறவேண்டும். பெற்றோர் தமது பெண் பிள்ளைக்கு தற்பாதுகாப்புக் கலையைப் பயிற்றுவிப்பதன் மூலம் அப்பிள்ளையின் சுயபாதுகாப்பை உறுதிசெய்வதோடு, வாழ்க்கையில் ஏற்படும் தடைகளைத் தகர்ப்பதற்கான மன உறுதியையும் ஊட்ட முடியும்.

ஒரு சிலர் தற்பாதுகாப்புக் கலையை தீய நோக்கங்களுக்கும் பயன்படுத்தி வருவது வேதனைக்குரியது. வன்முறை மனப்பாங்கோடுதற்பாதுகாப்புக்கலையை பயில்வது தவிர்க்கப்பட வேண்டும். (உ-19)

## மன்னாரில் மாதிரி பனம் பண்ணை

மாதிரிப்பனம் பண்ணை ஒன்றை மன்னாரில் அமைப்பதற்கென மன்னார் அரசாங்க அதிபர் வி.விஸ்வலிங்கம் 5ஏக்கர் நிலத்தை பனை அபிவிருத்திச்சபைக்கு வழங்கியுள்ளார்.

இப்பண்ணையில் பனை விதை நடுதல், உற்பத்திப் பொருட்களைப் பதனிடல் ஆகிய நடைமுறைகள் அடுத்தமாத அளவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

(உ-6)

## ஊர்காவற்றுறையில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று நடந்தது

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் பிரதேச உதவிஅரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் யாழ்மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் கலந்துகொண்டு அப்பிரதேச திணைக்களங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து கொண்டார்.

அத்துடன் அப்பிரச்சினைகளை நிவர்த்திசெய்ய நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்துள்ளார்,

(இ-75)

## இராசி பலன்

31. 07. 2002
(ஆடி 15, புதன்)
சப்தமி பி. இ 1. 23வரை
ரேவதி மு. ப 9. 05வரை
ராகுகாலம் 12. 03- 1. 33
நல்லநேரம் 4. 33- 6. 03

**மேடம்**
பெரியோர் மதிப்பு, காரிய அனுகூலம், சயனசுகம், விருந்துபசாரம்.

**இடபம்**
காரிய அலைச்சல், பணவிரயம், சகோதரர்உதவி,தேவையற்ற கோபம்.

**மிதுனம்**
குடும்ப சுகம், காரிய அனுகூலம, கௌரவமான நிலை, தனவரவு.

**கடகம்**
தொழில் முன்னேற்றம், முயற்சி பலிதம், தூரதேசச் செய்தி, அதிகாரம்.

**சிங்கம்**
உடல்நலக் குறைவு, காரிய தாமதம், கற்பனைமிகுதி, பிரயாணம்.

**கன்னி**
நண்பர்கள் மனஸ்தாபம், முயற்சி தடங்கல், திடீர் நன்மை, வாகனபயம்.

**துலாம்**
அபூர்வ சந்திப்பு, காரிய அனுகூலம், தொழில்நன்மை, போசன சுகம்.

**விருச்சிகம்**
உறவினர் சந்திப்பு, தேக ஆரோக்கியம், எடுத்தகாரியம் கைகூடும், சுவாரஸ்யம்.

**தனுசு**
வியாபார நன்மை, உடல் நலக்குறைவு,முயற்சிதாமதம், குடும்பக் கவலை.

**மகரம**
மனச்சஞ்சலம்,செல்வாக்கு, முயற்சி தாமதம், பிரயாணக் கஷ்டம்.

**கும்பம்**
அந்நியர் உதவி, காரிய அனுகூலம், தனவரவு, இனிய சம்பவம்.

**மீனம்**
வார்த்தைக் கலகம், முயற்சி தாமதம், வேலைக் கஷ்டம், சிறுவியாதி.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## பலாலி ராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் நாளைமுதல்பூஜை வழிபாடு

(திருநெல்வேலி)

பலாலி ராஜராஜேஸ்வரி ஆலயத்தில் நாளை தொடக்கம பூஜை வழிபாடுகள் நடத்த அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இவ் ஆலயத்தையும் அதன் சுற்றுப்பகுதியையும் மக்கள் சிரமதானம்மூலம் துப்புரவு செய்து பூசை வழிபாட்டுக்கு ஆயத்தம் செய்த வேளை இப்பகுதிக்கு மக்கள் செல்லக்கூடாது என படையினர் தடை விதித்தமை தெரிந்ததே.

இந்துகலாசார அமைச்சர் நேற்று பலாலி இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுடன் நடத்திய பேச்சுக்களை அடுத்து அதிகாரி இவ் அனுமதியை வழங்கியுள்ளார்.

இச்சந்திப்பில் படை நிலை அதிகாரிகள் ஆலய நிர்வாகிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதேவேளை பலாலியில் உள்ள ஏனைய ஆலயங்களிலும் பூஜைவழிபாடுகள்நடைபெற நடவடிக்கை எடுப்பதாக இந்து கலாசார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

(உ-43)

## விளையாட்டு போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையின் கீழ் இயங்கி வரும் பாலர் பாடசாலைவிளையாட்டுப்போட்டி இன்று பி.ப.2.00 மணிக்கு யாழ்.இந்து தமிழ் பெண்கள் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மாநகரசபை ஆணையாளர் இ.இராமலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளஇந்நிகழ்வில் முதல்வர் செ.கந்தையன் பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார். (உ-19)

## குழாய்க்கிணறு அமைக்க நிதிஉதவி

(யாழ்ப்பாணம்)

யாழ் சிறைச்சாலையில் குழாய்க்கிணறு அமைக்க 20 ஆயிரம் ரூபாகாசோலையை யாழ்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் என்.மதனராஜா யாழ் மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜாவிடம் வழங்கியுள்ளார். (இ)

## மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் யாழ்ப்பாணம் வருகை

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று நேற்று யாழ்ப்பாணத்திற்கான விஜயம் மேற்கொண்டுள்ளது.

கொழும்பு மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் எவ் பாயிஸ் முஸ்தப்பா மற்றும் வவுனியா பிராந்திய முகாமையாளர் எஸ்.ரவிந்திரன் மற்றும் உள்நாட்டு இடம் பெயர்ந்தவர்களுக்கான செயற் திட்ட இணைப்பாளர் ஆகியோரே இங்கு வருகை தந்துள்ளனர்.

இந்த அதிகாரிகள் இன்று அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பொலிஸ் அதிகாரிகள் இராணுவ அதிகாரிகள் யு.என். ஏச்.சி.ஆர் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்து மனித உரிமைகள் தொடர்பாக கலந்துரையாடவுள்ளனர்.

இவ் அதிகாரிகள் யாழ் மாவட்டத்தின் மனித உரிமைகள் தொடர்பாக ஆராய இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (உ-6)

## சூழலியல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

செடேக் நிறுவன மன்னார் திருகோணமலை, மட்டக்களப்பு ,யாழ்ப்பாண மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளுக்கு 'சூழலியல்' கருத்தரங்கு ஒன்றை எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் 20 திகதி வரை யாழ்ப்பாணத்தில் நடாத்தவுள்ளது.

இக் கருத்தரங்கில் சூழலியல் மாற்றங்களால் சமூகத்தில் ஏற்படும் பாதகநிலை தொடர்பாகவும் இன்றைய உலகில் சூழலியலின் தன்மை தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது. (ஷ-6)

## மகிழ்ச்சிச் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்ற இயக்குநர் பேராசிரியர் அருட்தந்தை நீ. மரியசேவியரின் 40வருட குருத்துவ வாழ்வின் நிறைவின் மகிழ்ச்சிச் சந்திப்பும், செயலக உறுப்பினர்கள், பொறுப்பாளர்களுடனான கலந்துரையாடலும் யாழ். திருமறைக் கலாமன்றத்தின் கலாமுற்றத்தில் எதிர்வரும் 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6. 00மணிக்கு இடம் பெறவுள்ளது. (உ- 6)

## உலகதரத்துக்கு இணையாக வடி சாராய உற்பத்தி

(யாழ்ப்பாணம்)

வடிசாராய உற்பத்தியில் மாற்றங்களைக் கொண்டு வந்து அதனை உலகத் தரத்துக்கு இணையானதாக ஆக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பனை அபிவிருத்திச்சபை ஆராய்ச்சி உத்தியோகத்தர் ஆர்.குகநேசன் தெரிவித்தார்.

இதற்கென 5 இலட்ச ரூபா பெறுமதியான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(உ-6)

## புதிய நிர்வாக சபை தெரிவு

(வண்ணார்பண்ணை)

யாழ்ப்பாண உயர் தொழில் நுட்ப நிறுவன மாணவர் ஒன்றிய 2002-2003 காலப்பகுதிக்கான புதிய நிர்வாக சபை அண்மையில் தெரிவு செய்யப்பட்டது.

தலைவராக ம. மக்ஸால் றொபின்சன், செயலாளராக வி.தயாபரன், பொருளாளராக அ.செந்தூரன், உபதலைவராக வீ. குகநேசன், உபசெயலாளராக கோ.தர்மகுமார், உள்ளக கணக்காய்வாளராக ச. தயாளன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (உ-109)

### சீனப் பிரதமர் - அமைச்சர் கரு சந்தித்துப் பேச்சு!

# சமாதான நடவடிக்கைகளுக்கு சீனா முழு ஆதரவு

# பெருமளவு நிதியுதவி அளிக்கவும் இணக்கப்பாடு

அரசாங்கத்தாலும் தமிழீழ விடுதலைப்புலிகளினாலும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான நடவடிக்கைகளுக்கு சீன அரசு பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக வாக்குறுதியளித்துள்ளது.

தற்போது சீனாவுக்கான விஜயத்தை மேற்கொண்டிருக்கும் மின்சக்தி எரிபொருள் துறை அமைச்சர் கருஜெயசூரிய, அந்நாட்டில் பிரதமர் சூரோஞ்சியை நேற்றுமுன்தினம் மாலை அவரது வாசஸ்தலத்தில் சந்தித்தபோதேஇவ்வாறு உறுதிமொழியளிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பின் போது, நாட்டில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகள் குறித்தும், பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டதுடன், சீன அரசு பொருளாதாரரீதியான உதவிகளை தொடர்ந்தும் வழங்கும்எனசூரோஞ்சி உறுதியளித்துள்ளார்.

இனங்களுக்கிடையிலான ஒற்றுமைகளை நாட்டில்கட்டியெழுப்புவதற்காக ஐக்கிய தேசிய முன்னணி அரசினால் மேற்கொள்ளப்பட்டு எந்தவொருநடவடிக்கைக்கும்தமது ஒத்துழைப்புண்டு என்றும் சீனப் பிரதமர் தெளிவுபடுத்தினார்.

சீனப்பிரதமரை சந்தித்த பின்னர் அது தொடர்பில் கருத்து தெரிவித்த அமைச்சர் கருஜெயசூரிய,

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவினால் மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான நடவடிக்கைகளுக்கு சர்வதேசரீதியிலான ஒத்துழைப்புஇன்றியமையாதது.

நாட்டில் சீரழிந்துள்ள பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கு சீன அரசாங்கத்தால் வழங்கப்படும் உதவிகளும் பெரும்பங்காற்றும் எனச்சுட்டிக்காட்டினார்.

நாடு எதிர் கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகளிலிருந்துமீட்சி பெற 25ஆயிரம் கோடி ரூபாக்களை பெற்றுக் கொடுக்கசீனா இணங்கியுள்ளதுடன்,

30 வருடங்களுக்குள்செலுத்தக் கூடியவாறு வட்டியில்லாக் கடனாக 65 கோடி ரூபாவை சீனாவழங்கியுள்ளது எனவும் தெரிவித்தார்.

சீனா- இலங்கைக்கு இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ளும் நோக்குடன் இரு நாடுகள் இடையேயும் விமான சேவைகள் நடத்துவது குறித்தும், இரு நாட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் இடையே தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வது தொடர்பாகவும் ஆராயப்பட்டதாகவும்அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சீனப்பிரதமருடனான சந்திப்பின் போது வெளிநாட்டு விவகாரங்கள் தொடர்பான உதவியமைச்சர் சீனாவுக்கான இலங்கை உயர் ஸ்தானிகர் ஆகியோர் உடனிருந்தனர்.

(உ-8)

### மட்டு மாவட்ட கூட்டமைப்பு பா. உ

# வீட்டைத் தாக்க முனைந்தோர் பொலிஸாரால் மடக்கிப் பிடிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ரி.தங்கவடிவேலின் வீட்டைத் தாக்க முயற்சித்த இனம்தெரியாத கோஷ்டியினரை மட்டக்களப்பு பொலிஸார் மடக்கிப் பிடித்தனர்.

நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் ஆயுதங்கள் சகிதம் சென்றஇனம்தெரியாத கோஷ்டி பாராளுமன்ற உறுப்பினரின் வீட்டை தாக்க முற்பட்ட சமயம், அவரது பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் மேற்கொண்டமுறியடிப்பு நடவடிக்கையின் போது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி 6 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

அனைவரும் சிகிச்சைக்காக மட்டக்களப்புவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன்,இவர்களுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வசந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

சிகிச்சை முடிந்ததும் அனைவரும் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளனர்.

பாராளுமன்றஉறுப்பினரின் வீட்டை தாக்க முற்பட்டதற்கான காரணங்கள் இன்னும் கண்டறியப்படாதபோதிலும் இக்கோஷ்டியினருக்கு பின்னால் ஒரு அரசியல் கட்சி செயற்படுவதாககூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(உ-8)

### இலங்கை - பெல்ஜியம் இடையே

## கப்பல் போக்குவரத்து தொடர்பான ஒப்பந்தம்

(கொழும்பு)

இலங்கை-பெல்ஜியம் ஆகிய நாடுகளுக்கிடையிலான கப்பல் போக்குவரத்துக்களை அதிகரிப்பது தொடர்பான ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்திடப் படவுள்ளது.

துறைமுக அபிவிருத்தி கப்பல் போக்குவரத்து அமைச்சு, வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள், பெல்ஜிய நாட்டு அதிகாரிகளுடன் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்திய பின்னர் இது தொடர்பான இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது.

இவ் ஒப்பந்தத்தின் மூலம், பெல்ஜியத்தின் தேசிய கொள்கலன்கள், பயணிகள் ,கப்பல் சேவைகளில் இலங்கை மாலுமிகளும் பணியாற்றுவதற்கு வாய்ப்பு ஏற்படுவதாக கப்பல் துறைமுக அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ் ஒப்பந்தம் தொடர்பான மேலதிக பேச்சுக்களை நடத்த இலங்கை தூதுக் குழுவினர் விரைவில் பெல்ஜியம் செல்ல லிருப்பதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

(உ-8)

## முதற் திருவிருந்து

(கொழும்புத்துறை)

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்திலே வருடா வருடம் வழங்கப்படும் முதற்திருவிருந்து ,எதிர் வரும் 3 ஆம் திகதி சனிக்கிழமை பங்குத்தந்தை அருட்திரு யேசுரெட்ணம் அடிகளார் தலைமையில்புனித அந்தோனியார் ஆலயத்திலே இடம்பெறவுள்ளது.

(உ-262)

### கணனி நூல்கள்

## கொள்வனவு

(மானிப்பாய்)

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் கீழுள்ள நூலகங்களுக்கு கணனி சம்பந்தமான நூல்கள் அண்மையில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

மாணவர்களின் நன்மை கருதி 10 ஆயிரம் ரூபா பெறுமதியான கணனி சம்பந்தமான நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டதாக மேற்படி பிரதேச சபைத் தலைவர் தெரிவித்தார்.

(ஷ-232)

## புதிய கணனி கொள்வனவு

(மானிப்பாய்)

வலி மேற்கு பிரதேச சபையின் தலைமையலுவலகத்திற்கு புதிய கணனியும் பிறின்ரரும் அண்மையில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

முன்னர் பாவனையிலிருந்த கணனி பழுதடைந்தமையால் சம்பளப் பட்டியல் தயாரிப்பு, வேறு முக்கியமான வேலைகளை விரைவாகச் செய்ய முடியாத நிலை இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஷ-232)

### இலக்கத்தகடு வழங்கல்

வலிகிழக்கு பிரதேசசபை உப அலுவலகத்தில் 2002 ஆம் ஆண்டுக்கான துவிச்சக்கரவண்டி இலக்கத்தகடுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மேற்படி அலுவலகத்தில் 5 ரூபா செலுத்தி அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஷ-215)

## இலங்கை நீதிவான் சங்க உறுப்பினர்கள் 52 பேர் 3 நாள் யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை சமாதான நீதிவான்கள் சங்கத்தின் உறுப்பினர்கள் 52 பேர் அடங்கிய குழு ஒன்று 3 நாள் விஜயமாக எதிர்வரும் 24 ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளது.

யாழ். குடாநாட்டில் உள்ள அனைத்து சமாதான நீதிவான்களையும் சந்தித்து அவர்களுடன் சிநேக பூர்வ உறவுகளை வளர்த்துக்கொள்வதே இவ் விஜயத்தின்நோக்கமாகும்.

அத்துடன், யாழ். குடாநாட்டு பொது அமைப்புக்களைச் சந்தித்து மக்களின் நிலை தொடர்பாகவும்ஆராயவுள்ளனர்.

(உ-6)

### 'சீதுவ' சமாதானக் குழுவினால்

## வறிய மாணவர்களுக்கு உபகரணங்கள் அன்பளிப்பு

(ஈச்சமோட்டை)

தென்னிலங்கையிலிருந்து அருட்தந்தை அன்ரனி சிறில் தலைமையில் அண்மையில் யாழ்வந்த 'சீதுவ'சமாதானக் குழுவினரால் வறியமாணவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

பௌத்த கிறிஸ்தவர்களை உள்ளடக்கிய இக்குழுவினர் நல்லூர் ஞானோதய பாடசாலை, யாழ். சென்றோக் பாடசாலை ஆகியவற்றில் தெரிவுசெய்யப்பட்ட வறிய மாணவர்களுக்கு 5ஆயிரம் ரூபா பெறுமதியான அப்பியாசப் புத்தகங்களை வழங்கினர்.

மேலும் திக்கத்தைச் சேர்ந்த, போரின் பாதிப்பால் வலதுகையை இழந்த சிறுவனுக்கு துவிச்சக்கரவண்டியொன்றும் வழங்கப்பட்டது. இதைவிட வேறு வறியமாணவர்களுக்கு உதவிவழங்கவென ஒருதொகுதி கல்வி உபகரணங்கள் கியூடெக் நிறுவனத்திடமும் கையளிக்கப்பட்டுள்ளன.

இக்குழுவினர் யாழில் இருந்தபோது பல்வேறு இடங்களுக்குச்சென்று தமது சமாதான நல்லெண்ணத்தை தெரிவித்ததோடு யாழ். மக்களின் கருத்துக்களையும் கேட்டறிந்து கொண்டனர்.

(ஷ-59)

## ஏழைப் பெண்களுக்கு தொழிற்பயிற்சி செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் விதவைகள், ஏழைப் பெண்களுக்கான தொழிற்பயிற்சிச் செயலமர்வு எதிர்வரும் 17, 18 ஆம் திகதிகளில் யாழ். செயலக கேட்போர்கூடத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி செயலமர்வை நடத்துவதற்கு மகளிர் விவகாரஅமைச்சு அதிகாரிகள் குழுவொன்று இங்கு வரவுள்ளது.

பிரதேச ரீதியாகத் தெரிவு செய்யப்படும் 200 பெண்கள் இதில் கலந்துகொள்ளவுள்ளனர்.

(உ-6)

## கல்வி உபகரணங்கள்

(தென்மராட்சி)

அறவழிப்போராட்டக் குழுவினால் வடமராட்சி,தென்மராட்சிப் பிரதேசங்களில் நடத்தப்பட்டுவரும் 24 மழலைகள் கல்விப் பூங்காக்களுக்கு,சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தினால் கல்வி உபகரணங்கள் மற்றும் விளையாட்டு உபகரணங்களும் அண்மையில் வழங்கப்பட்டன.

நிறுவனத்தின் தலைவர் டாக்டர். எஸ். எஸ். அருளானந்தம், இயக்குநர் சு.நடேசபிள்ளை ஆகியோர் இவற்றினை முன்பள்ளி ஆசிரியைகளிடம் கையளித்தனர்.

(உ-77)

## செவிச் செல்வம்

மிகுந்த விழிப்பாக இருத்தல் வேண்டும். அவர்களுக்கு உண்மைதெளிவாகத் தெரிந்தாலும், அவற்றை வெளிப்படையாகக் கூறாமல், சிறிது சுற்றிவளைத்துக் கூறுவதே நலமாகவிருக்கும், 'உயிர் போய்விடும்' எனக்கூறிய கேஸ்கள் பிழைத்துக்கொண்டதால் கெட்டுப்போன டாக்டர்களும், 'தோற்றுப் போகும்' எனக்கூறிய கேஸ்கள் வெற்றிபெற்றதால் அழிந்துபோன வழக்கறிஞர்களும் பலருண்டு.

குறைவாகப் பேசவேண்டும்

கேள்விகேட்டு அறிவதைவிட, கேளாமற்கேட்டு அறிவதைவிட, கேள்விக்கு விடை கூறுவதைவிட, எதையும் எவரிடமும் பேசாமலிருக்கப் பழகிக்கொள்வதே மிகவும் நல்லதாகும். ஏனெனில், குறைவாகப் பேசுகிறவர்களையே அறிவாளிகள் விரும்புகிறார்கள்.

அதுமட்டுமல்ல, இன்றைய தினம் உயர்ந்த அறிஞர்களாகவும், சிறந்த செயலாளர்களாகவும் உள்ள தலைவர்களெல்லாம், குறைந்த பேச்சு உடையவர்களாகவே காணப்படுகிறார்கள் .வாய்க்கு இரட்டைக் கதவுகள் இருப்பது ஏன் தெரியுமா? எப்போதும் மூடிவைப்பதற்கு காதுகளுக்குக் கதவுகளே இல்லாமலிருப்பது ஏன் தெரியுமா? எப்போதும் கேட்டுக்கொண்டிருப்பதற்கு,வாய் ஒன்றும், காது இரண்டுமாக அமைந்திருப்பது ஏன் தெரியுமா? குறைவாகப் பேசு, அதிகமாகக் கேள் என்பதற்கு!

காதுக்கும் வாய்க்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. வாய் நல்லதைச் சொல்ல வேண்டுமானால், காது நல்லதைக் கேட்டிருக்கவேண்டும். வாய் வணக்கமாக இன்னுரைகளைக் கூறவேண்டுமானால், காது இணக்கமாக நல்லுரைகளைக் கேட்டிருக்க வேண்டும். அதிகம் கூறுவானேன், காதால் கேட்க முடியாதபோது, வாயால் பேசவே முடியாது எனக் கூறிவிடலாம்.

ஆகவே, கேள்விச் செல்வத்தை பெறு. அதையும் கேளாமல் கேட்டுப் பெறு; கேட்டுத்தான் பெறவேண்டும் என்ற நிலை வந்துவிட்டால், மெதுவாகக் கேள். அதையும் கற்றறிந்த மக்களிடம் மட்டுமே கேள். அதிலும் ஒழுக்கமுடையவர்களிடம் மட்டுமே கேள், அவர்களிடமிருந்து வருகிற விடையானது; சேற்று நிலத்திலே வழுக்கி, வழுக்கி நடக்கின்றவனுக்கு ஊன்றுகோல்துணை செய்வதுபோல, உன் வாழ்க்கைப் பாதையில் வழுக்காது நடக்க உயர்ந்ததோர் ஊன்றுகோலாக நின்று உதவும், எப்பொழுதும் நல்லவைகளைக் கேள். அல்லது எப்பொழுதாவது நல்லவைகளைக் கேள். அல்லது எவ்வளவாவது நல்லவைகளைக் கேள். அவ்வளவு உனக்குச் சிறப்பும்உயர்வும் உண்டு. ''எனைத் தானும் நல்லவை கேட்க என்ற குறளை எப்போதும் சொல்லிக் கொண்டிரு.

# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள்

ஆக்கம் – ''சாயிகல்வி வட்டம்''
கே.வி.குணசேகரம்
எம்.விக்னேஸ்வரன்

**சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் அடையாளம் இடுக.**

01. டைனமோவில் இருந்து மின்னைப் பெற்றுக் கொள்ளலாம். ( )
02. சூரிய கலத்திலிருந்து மின்னைப் பெற முடியாது. ( )
03. மின் குமிழில் நிக்கிரோம் இழை உண்டு. ( )
04. மின் கலத்தில் இரசாயன சக்தி மின்சக்தியாக மாறுகிறது. ( )
05. தொடர் மின்கல இணைப்பில் மின் குமிழின் பிரகாசம் கூடும் ( )
06. சமாந்தர மின்கல இணைப்பில் பிரகாசம் கூடும். ( )
07. ஆளி மூலம் மின் சுற்றில் மின்னோட்டத்தைத் துண்டிக்கலாம். ( )
08. வீட்டின் மின் குமிழ் சமாந்தர இணைப்பில் இணைக்கப்படும். ( )
09. மின் குமிழில் இரண்டு முடிவிடங்கள் உண்டு. ( )
10. புறோர் ஒளிவுக்குழாய் குறைந்த மின் சக்தியிலும் பிரகாசமாக ஒளிரும். ( )
11. கருமையான பொருட்கள் வெப்பத்தை நன்றாக உறிஞ்சும். ( )
12. இயற்கை வெப்பமுதல் சூரியன். ( )
13. வெள்ளை நிறப் பொருட்கள் வெப்பத்தை நன்றாக உறிஞ்சும். ( )
14. சூழல் வெப்பமானி செல்சியஸ் அளவுத் திட்டத்தையும் பரனைற் அளவுத்திட்டத்தையும் கொண்டது. ( )
15. திரவத்தைவிட வாயு குறைந்தளவில் விரிவடையும். ( )

**கீறிட்ட இடங்களைத் தரப்பட்ட சொற்களிலிருந்து தெரிவு செய்து எழுதுக.**
**தொடரிணைப்பு , சக்தி, பிரதான ஆளி, 1.5V, மண்ணெண்ணை**

16. ........................................ திரவ எரி பொருளாகும்.
17. உலர் மின்கல அழுத்தம் ........................................ ஆகும்.
18. வீட்டு மின் சுற்றில் மின் அதிர்ச்சி ஒருவருக்கு ஏற்பட்டால்............................ நிறுத்த வேண்டும்.
19. மின் ஆழியில் மின்கலம் ........................இணைப்பில் இணைக்கப்பட்டுள்ளது.
20. மின் ................................ வடிவம்.

**எளியமின்சுற்று அமைக்கத் தேவையான பொருட்கள்.**

21. ................................ 22. ................................
23. ................................ 24. ................................

**மூன்று வகைப் பாறைகளும் எவை.**

25. ........................ 26. ................................ 27. ................................

**நுண்ணங்கிகள் இரண்டு தருக.**

28. ................................ 29. ................................

**சேதனப் பசளை இரண்டு தருக.**

30. ................................ 31. ................................

**அசேதனப் பசளை இரண்டு தருக.**

32. ................................ 33. ................................

**வண்ணத்துப் பூச்சியின் வாழ்க்கை வட்டத்தை ஒழுங்காக எழுதுக.**

34........................ 35........................................
36........................ 37........................................


**சுருக்க விடை தருக**

38. மீனின் சுவாச உறுப்பு எது?.......
39. நீரில் வாழ்க்கை வட்டத்தை ஆரம்பிக்கும் விலங்கு எது?
40. பூவில் வித்தாகும் பகுதி எது?
41. கடலின் ஆழம் என்ன ஒலியால் அளக்கப்படுகிறது.?
42. காற்றின் திசையை அளக்கும் கருவி எது?
43. வாகன எரிபொருள் எரியும் போது வெளியிடப்படும் உலோகம் .எது?
44. மின்கலத்தின் வோல்ற் (V) அளவு என்ன?
45. சூரிய அடுப்பில் பயன்படுத்தப்படும் ஆடி எது?
46. நெம்பு எத்தனை வகைப்படும்?
47. வித்து முளைக்கும் போது முதலில் வெளிவருவது எது?
48. வித்தின் எப்பகுதியூடாக நீர் உறிஞ்சப்படும்?
49. உயரமான இடங்களில் என்ன சக்தி கூட?
50. சைக்கிள் என்ன வகைப் பொருள்?

**சரியான விடையின் கீழ்க் கோடிடுக**


51. விற்றமின் A குறைபாட்டால் உண்டாகும் நோய்
மாலைக்கண், டெங்கு, வயிற்றுளைவு
52. யானைக் கால் நோய் எதனால் உண்டாகிறது?
வீட்டு ஈ, நுளம்பு, உண்ணி
53. வளமான மண் கொண்டுள்ள தன்மை
1)வளி, நீரடக்கம், பசளை
2) களி, பசளை, மணல்
3) களி, வளி, மணல்
54. கமக்காரர்களின் நண்பனான அங்கி
மாடு, மண்புழு, காகம்
55. நீர்ச்சில்லு சுற்றும்போது நீர் என்ன சக்தியாக மாற்றப்படுகிறது.
இயக்கசக்தி, வெப்பசக்தி, ஒளிச்சக்தி
56. மொட்டு ஒன்றைப் பாதுகாக்கும் பகுதி
அல்லி, புல்லி, சூலகம்
57. காற்றின் வேகத்தை அளக்கும் கருவி
வெப்பமானி, வேகமானி. காற்றுத்திசை காட்டி
58. வளியில் பெருமளவு உள்ள வாயு
நைதரசன், ஒட்சிசன், காபனீரொட்சைட்
59. கறையான் எவ்வகைப் பிராணி
கூட்டுப்பிராணி, தனிப்பிராணி, சமூகப்பிராணி
60. வாயுநிலை எரிபொருள் எது?
மெதேன், விறகு, மண்ணெண்ணை


**படங்களைப் பார்த்து தரப்பட்ட வினாக்களுக்கு விடைதருக**



61. மின்கலம் எவ்வாறு இணைக்கப்பட்டுள்ளது?
62 மின்கலத்தின் நேர் முடிவிடம் மின் குமிழின் எம் முடிவிடத்துடன் இணைக்கப்பட்டுள்ளது?
63. மின்கலத்தின் எதிர்முடிவிடம் மின் குமிழின் எம்முடிவிடத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

64. இங்கு மின்கலம் எவ்வாறு இணைக்கப்பட்டுள்ளது?
65. இங்கு மின் குமிழ் எவ்வாறு இணைக்கப்பட்டுள்ளது?






66. மின் குமிழ் எவ்வாறு இணைக்கப்பட்டுள்ளது?
67. மின் கலம் எவ்வாறு இணைக்கப்பட்டுள்ளது.


**மின்குமிழில் காணப்படும் முடிவிடங்கள்**

68.................................................. 69..................................................





70. எந்த இணைப்பு ஒளிரும்?
71. எந்த இணைப்பு ஒளிராது?


72. தொங்கிக் கொண்டிருக்கும் இரு சட்டங்களில் ஒன்று காந்தமாகும். காந்தத்தைக் கண்டுபிடிக்க நீர் செய்யும் எளிய பரிசோதனை என்ன?



**கீழேயுள்ள படத்தைப் பார்த்து விடை தருக**




73. நிறமூட்டிய நீர் எங்கே செல்லும்?
74. ஏன்?
75. நிறமூட்டிய நீருள்ள குப்பியை குளிர்நீரில் வைக்கும் போது என்ன நடைபெறும்?
76. காரணம் என்ன?



**பெயரிடுக**

77. A)..................................................
78. B)..................................................
79. C)..................................................


**மேசையின் மேல் புத்தகத்தை வைத்துத் தள்ளுக**

80. உமது அவதானம் என்ன?

**'புத்தகத்தின் கீழ் பென்சிலை வைத்துத் தள்ளுக**

81. உமது அவதானம் என்ன?
82. எச்சந்தர்ப்பத்தில் உராய்வு விசை கூட?
83. எச்சந்தர்ப்பத்தில் உராய்வு விசை குறைவு?

**கீழே காட்டப்பட்டது காந்தத்தால் ஆன ஒரு விளையாட்டுப் பாரம் தூக்கியாகும்.**



**கீழேயுள்ள பெட்டியில் பொத்தான்கள், ஆணி, பிளாஸ்திக் துண்டுகள், தகரத்துண்டுகள், குண்டூசி, கரி, கல், என்பன உள்ளன.**

**பாரந்தூக்கியால் தூக்க முடியாத பொருள்**

84. ..................................................
85. ..................................................

**பாரந்தூக்கியால் தூக்கக் கூடிய பொருள்**

86. ..................................................
87. ..................................................

**பூவின் பகுதிகள் எவை?**

88. ..................................................
89. ..................................................
90. ..................................................
91. ..................................................
92. ..................................................

93. பூவின் பச்சை நிறமான பகுதிக்கு என்ன பெயர்?

**வளியின் நான்கு இயல்புகள் எவை?**

94. ..................................................
95. ..................................................
96. ..................................................
97. ..................................................
98. சமையல் பாத்திரங்கள் செய்யும் உலோகம் எது?
99. ஒரு பால் பூ எது?
100. உக்கலை உருவாக்குவது எது?

# இன்று ஒரு தகவல்

## ஆரம்ப உயிர்த் தோற்றம்

உலகில்உள்ள பொருள்களை எல்லாம் இருவகைப் படுத்தலாம். தாவரங்களும் விலங்குகளும் உயிருள்ளன. கல், மண், நீர், முதலியவை உயிரில்லாதன. உயிர்ப் பொருள்கள் முதன் முதலாக எவ்வாறு தோன்றின என்ற எண்ணம் பல நூற்றாண்டுகளாகப் பலப்பல அறிஞர்கருத்தில் தோன்றி வந்தது. எனினும் இதற்குத் திட்டவட்டமான முடிவு இன்னும்காணப் படவில்லை. பல திறப்பட்ட அறிஞர்கள் தத்தம்கருத்திற்கு ஏற்ப மெய்ஞ்ஞானமும் விஞ்ஞானமும் விளங்கி வந்த சூழ்நிலைக்கு ஒத்த வண்ணம் இவ்வினாவிற்கு விடைகூறி வருகின்றனர்.

ஈ புழு, தவளை, வண்டுமுதலிய உயிர்கள், இறைச்சி, மலம் சேறு, வியர்வை முதலிய உயிரில்லாத பொருள்களிடத்தில் தோன்றின என்று அரிஸ்டோட்டில், பிளைனி, முதலிய கிரேக்கர்கள் கருதினார்கள். இக்கொள்கை சீனா, எகிப்து முதலிய வேறு நாடுகளிலும் பரவி இருந்தது. லுவென்காக் என்ற டச்சுக்காரர் அழுகிய இறைச்சி, பால், கள் முதலியவற்றில் மிக நுண்ணிய உயிர்கள் தோன்றுவதாகக் கூறினார். 1862 ஆம் ஆண்டில் பிரான்சு நாட்டு விஞ்ஞானி லூயி பாய்ஸ்சர் ஒரு பக்கத்தில் பஞ்சு அடைத்த காற்று உறிஞ்சியின் மூலம் சுமார் 24 மணி நேரம் காற்றை உள்ளே இழுத்தார். அந்தப் பஞ்சைச் சாராயம் ஈதர் கலந்த திரவத்தில் கரைத்தார். அடியில் தங்கியபொருள்களை நுண்ணோக்கி மூலம் ஆராய்ந்தார். அதில் பல நூற்றுக்கணக்கான உயிர்கள் உலவி வருவதைக் கண்டார். இது போலப் பல சோதனைகளை செய்து உயிர்ப்பொருள்கள் எல்லாம் உயிரில்லாதவற்றிலிருந்து தோன்றமுடியாது என்றும். உயிர்கள்உயிர்ப்பொருள்களிடமிருந்தே வந்திருக்க வேண்டும் என்றும் கூறினார். இக்கருத்தை 1668 ஆம்ஆண்டில் ரீடி ஆய்ந்துசொன்னார். எனினும் யாரும் கேட்கவில்லை.

வானத்தில் சுற்றிவரும் கோள்களிலிருந்து நுண்ணிய உயிரினங்கள் இவ்வுலகிற்கு வந்திருக்கக்கூடுமென்ற கொள்கை 19 ஆம் நுற்றாண்டின் பிற்பகுதியில் நிலவி வந்தது ஆனால் அதற்கு எதிர்ப்பும் இல்லாமலில்லை. எனினும் பிற்காலத்தில் உயிரில் கரைந்து, கரைந்து அதிகரித்தன. இந்த மாறுதல் உயிர்த் தோற்றத்திற்கு இன்றியமையாத முன்னேற்பாடாகும். இந்த நீருலகத்திற்கு மேல்உள்ளது வளியுலகம், இவைகளின் வெப்பநிலை சூரியனிலிருந்து பெறப்பட்டது. இந்த மூன்று படலங்களிலும் பல்வேறுவகையானமாறுதல்கள்ஏற்பட்டன. நிலஒட்டில் ஹீலியம் நீர்வளி ஆகிய மூலகங்களும், மீதேன், ஈதேன், அசிடிலீன் முதலிய நீர்க்கரிமங்களும் தோன்றலாயின. அவற்றுள் ஒருபகுதிவளியுலகில் நிற்க, ஒரு பகுதிசில வேதி மாற்றங்களை அடைந்தது. இம்மாற்றங்களுக் கெல்லாம் சூரிய ஒளிக்கதிர்கள், எரிமலைகள், வளியுலகில் உண்டாகும் மின்சாரச் சிதறல்முதலியவை சக்தி கொடுத்தன. இந்த வேதிமாற்றம் உயிர்ப் பொருள்களுக்கு வேண்டிய மூலப் பொருள்களை உண்டாக்கிறது. இந்நிலையில் உலகமும் நாளடைவில் நன்கு குளிர்ந்து வந்தது நீர் வளி, வெடியுப்பு வளி, கரி, உயிர் வளி ஆகியவற்றை மூலமாகக் கொண்டு மிகச்சிக்கலானகலப்புப் பொருள்கள் தோன்றவாயின: இவை மிகச் சாதாரணமான புரொட்டீன்களாக இருக்கலாம் என்று கூறுவர்.

உலகில் உயிர்கள்தோன்றிய அந்நாள் தொட்டுஇன்றுவரை உள்ள நுண்மங்கள், வைரஸ் முதலிய நுண்ணிய உயிர்கள் புரொட்டப் பிளாசம் என்ற உயிர்ப் பொருளை கொண்டுள்ளன. அந்தப் புரொட்டப் பிளாசம்உயிரற்றபுரோட்டீன்களால் ஆக்கப்பட்டுள்ளது.

புரொட்டீன்கள் அமினோ அமிலங்களால் அமைக்கப்பட்டுள்ளன. இவை உலகில் எவ்வாறு தோன்றின என்பது தெரிய வந்தால் உயிர்தோன்றிய உண்மை தெரியவரும். இதனை ஒருவாறு வெளிப்படுத்த மில்லர் சிலசோதனைகளைச் செய்தார். கரி வளி, அமோனியா நீராவி முதலியவற்றை மிக வலிமை யான பாத்திரத்தில் அடைத்து அதனுள் மிகப்பெருஞ்சக்தி வாய்ந்த மின்சாரத்தைச் சிதறச் செய்தார். பலவேதி மாற்றங்களுக்கு உட்பட்ட இப் பொருள்களுள் கடைசியாக எஞ்சியவற்றை ஆராய்ந்து பார்த்தார். அவை அமினோ அமிலங்களாக இருந்தன. இச் சோதனையை முக்கியமாக பாப்லோங்ஸ்கயா, பாசின்ஸ்கி என்பவர்கள் சற்று மாற்றிச் செய்து பார்த்தார்கள் அதில் இவர்களும் பல அமினோ அமி

# நாவலர் அவதரித்த சிவபூமியில் பசுவதையை முற்றாக நிறுத்துங்கள்

## சுவாமி தந்திர தேவா வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ் பூமி என்பது சிவபூமி, இந்தப் பூமியில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சென்ற நூற்றாண்டில் சைவத்தையும் தமிழையும் கட்டிக் காத்தவர். சைவமும் தமிழும் வளர்த்த நாவலர் அவதரித்த இப் பூமியில் பசுவதையும், பசுவை உரித்துஉண்பதும், நடைபெறுகின்றது. இதை சகல இந்துக்களும் தடுத்து நிறுத்த வேண்டும்.

இவ்வாறு அகில இலங்கை இந்து சமய அபிவிருத்தி சபைத் தலைவரும், இந்து சமய பிரச்சாரகருமான ஸ்ரீமத் சுவாமி தந்திர தேவா மகராஜ் யாழ் இணுவில் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற ஆன்மீக எழுச்சி ஒன்று கூடலில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

கல்லூரி உப அதிபர் தலைமையில் நடை பெற்ற இந் நிகழ்வில் சுவாமி ஜீ தொடர்ந்து கூறியதாவது, சைவமும் தமிழும் ஒன்றே தமிழ் கலாசாரமே சைவக் கலாசாரம், இதுவே இந்துக் கலாசாரமாகும். எங்களுடைய சமய விதிமுறைகளை பொறுத்த வரை பசுவதை. மாட்டு இறைச்சி உண்பது கண்டிப்பாக தடை செய்யப்பட்டுள்ளது.

அண்மைக் காலங்களில் யாழ்ப்பாண பூமியில் கலாசாரத்திற்கு எதிரான நடைமுறைகளை நாம் அறிகின்றோம். உதாரணமாக சில பிரத்தியேக கல்வி நிலையங்களுக்கு வேட்டி அணிந்து செல்லும் மாணவர்கள் கேலி செய்யப்படுகின்றனர் (பிரத்தியேக கல்வி நிலைய ஏனைய மாணவர்களால்) இதுபோன்ற கலாசார சீரழிவுகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. கல்வி, பணவசதி மட்டும் வாழ்க்கையின்நோக்கங்களைநிறைவேற்றாது சாத்வீக பண்பாடு, பக்தி உணர்வுகளுடன் மாணவர்களை பாடசாலைகளில் ஊக்குவிக்க வேண்டும் என்று சுவாமி தெரிவித்தார்.

தொடர்ந்து லண்டன் வெம்பிலி சிவன் கோயில் பிரதிநிதி விவேகானந்தனின் அழைப்பை ஏற்று இவ் ஆலயத்திலிருந்து இணுவில் இந்துக் கல்லூரிக்கான அன்பளிப்பு செய்யப்பட்ட கணனி பயிற்சி நிலையத்தை சுவாமி தந்திர தேவா திறந்து வைத்தார். இந் நிகழ்வில் சுவாமி வறிய மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகளையும் விநியோகித்தார்.

சுவாமிகளுடன் இந் நிகழ்வில் பிரசங்கபூஷணம் கணேசமூர்த்தி மற்றும் இந்து சமய அபிவிருத்தி சபை செயலாளர் பத்ம நாப சர்மா மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தலைவர் சீ.யோகேஸ்வரன், வடபிராந்திய இந்துப் பேரவைச் செயலாளர் ப.சிவலோகநாதன், ஆகியோர் கலந்து கொண்டனர். (உ)

## ஜெறாட்டின் முதலாம் ஆண்டு நினைவு நாள்

(யாழ்ப்பாணம்)

அமரர் வி. எம். ஜெறாட்டின் முதலாம் ஆண்டு நினைவு நாளும் 'இதயம்' நூல் வெளியீடும் எதிர்வரும் 3 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு சென்றோக்ஸ் யோகம் கலையரங்கில் இடம் பெறவுள்ளது. (உ)

## அழைப்பை ஏற்க மறுப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காகுமாரதுங்காவின் கைப்பை தொடர்பாக அதனை இறக்குமதிசெய்வதற்கு துணையாக இருந்த ஜனாதிபதி சந்திரிகாவின் பாதுகாப்பு ஆலோசகர் சுமணரட்ணாவை விசாரணை செய்வதற்கு குற்றப் புலனாய்வுப்பிரிவினர் விடுத்த அழைப்பை அவர் ஏற்றுக் கொள்ளாதுபிறிதொரு திகதிக்கு விசாரணைக்கு வருவதாக அறிவித்துள்ளார். (ம)

## விபத்தில் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

குருநகர் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற அதேயிடத்தைச் சேர்ந்த மோசே சிவனேஸ் சின்னவன் (வயது 30) என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-6)

## தொலைபேசி அன்பளிப்பு

(உரும்பிராய்)

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்திற்கு தொலைபேசி வசதியை அப் பாடசாலையின் பழைய மாணவி

## திருட்டில் ஈடுபட்டோருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராயிலுள்ள கடையொன்றை உடைத்து அங்கிருந்த பொருட்களைத் திருடினார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட 3 சிறுவர்கள் நேற்று முன்தினம் யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்களை அடுத்தமாதம் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி இ. த. விக்னராஜா உத்தரவிட்டார். (ஷ-6)

## குற்றத்தடுப்பு பணியகம் மீண்டும் செயற்படும்

(கொழும்பு)

கடந்த அரசாங்கத்தினால் கலைக்கப்பட்ட குற்றத்தடுப்புப் பணியகம் ஆகஸ்ட்மாதம் முதல் மீண்டும் கொழும்பில் செயற்படவுள்ளது.

பொலிஸ்மா அதிபர்காமினி செனவிரட்ணவின் தலைமையில் இந்தப் பணியகம் இயங்கவுள்ளதாக கொழும்புப்பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர் பேர்திலியனகே தெரிவித்துள்ளார். (உ-3)

## குடாநாட்டில் 48இந்து ஆலயங்களில்

வந்திருக்கக்கூடுமென்ற கொள்கை 19 ஆம் நுற்றாண்டின் பிற்பகுதியில் நிலவி வந்தது ஆனால் அதற்கு எதிர்ப்பும் இல்லாமலில்லை. எனினும் பிற்காலத்தில் உயிரில்லாத பொருள்களிடமிருந்து உயிர்கள் தோன்றியிருக்க வேண்டுமென்ற கருத்து வலுவடைந்தது.

அண்டத்தில் நம் மண்ணுலகம் தோன்றிஏறக்குறைய200 கோடி ஆண்டுகள் ஆகின்றன என்பர். உலகில் உயிர்கள் தோன்றுவதற்கு வெகுகாலமாயிற்று. அப்போதிருந்தசூழ்நிலையில் உலகம் எவ்வாறு இருந்திருக்கக் கூடும்என்பதை ஒருவாறு ஊகித்து அறியலாம் நட்சத்திர ஒளிக்கதிரையும், நிலத்தின் அமைப்பையும், வானத்திலிருந்துசிதறிவிழுந்த விண்கற்களையும் ஆராய்ந்து பார்த்தால் அந்நாளில் நிலத்தின் நடுவே உலோகக் கலப்புள்ள கார்பைடுகளும், நைட்ரைடுகளும் இருந்திருக்கலாம் என்பர். நிலத்தின் மேற்பரப்பாகிய ஓடு, பாறை உலகம் எனப்படும். இதில் இருந்தகனமான பொருள்கள் நிலத்திற்குள் அழுந்தின. இவ்வோட்டினிடமாக ஒன்றியிருக்கும் மற்றொரு மேற்பரப்பிற்கு நீருலகும் என்று பெயர் இப்போது நிலத்தைச் சுற்றியுள்ள நீர் அப்போதுமிகவும்குறைந்திருந்தது. அந்த நீரில் வேதிப் பொருள்கள் மிகக்குறைவு. காலப்போக்கில் கரிமக்கலப்பற்ற வேதிப்பொருள்கள் நீரில் அமிலங்களாக இருந்தன. இச் சோதனையை முக்கியமாக பாப்லோங்ஸ்கயா, பாசின்ஸ்கி என்பவர்கள் சற்று மாற்றிச் செய்து பார்த்தார்கள் அதில் இவர்களும் பல அமினோ அமிலங்களைப் பெற முடிந்தது

ஆதலால் அமினோ அமிலங்கள் உண்டாகக் கூடிய சூழ்நிலை அக்காலத்தில் ஏற்பட்டிருக்கலாம். அப்பொழுது கரிவளியும், நீராவியும் கண்ணுக்குப் புலப்படாத நீல ஒளிக்கதிரும் வேதிமாற்றங்களால் பல்வேறு மாறுதல்களைப் பெற்று, அமினோஅமிலங்களையும், கரிமக்கலப்புப் பொருள்களையும்உண்டாக்கி வந்தன. இவையே புரொட்டீன்களை உண்டாக்கி இருக்கலாம். அப்புரொட்டீன்கள் தக்க சூழ் நிலையில் இனப் பெருக்கம் செய்யக் கூடிய திறத்தைப் பெற்றும் இருக்கலாம், அவைகளே காலப் போக்கில் வைரஸ், நுண்மம் முதலிய உருவங்களாகஉயிர்ப் பொருள்களாகத் தோன்றியிருக்கலாம். இவையே உலகில் தோன்றிய முதல் உயிர்கள் என்றும், இவைதோன்றிச் சற்றேறக்குறைய பத்துக் கோடியே ஐம்பது இலட்சம் ஆண்டுகள் ஆகின்றன என்றும்கூறுவர். இனங்களில் நுண்மங்கள் 3முதல் 5மைக்ரான் நீளமும் 0.15மைக்ரான் அகலமும் உள்ளவை. (மைக்ரான் என்பது1/1000மில்லி மீட்டர் நீளமானது) சாதாரணமாக

(6-ம் பக்கம் பார்க்க)

(உரும்பிராய்)

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்திற்கு தொலைபேசி வசதியை அப் பாடசாலையின் பழைய மாணவி ஒருவர் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

பாடசாலையின் வளர்ச்சி கருதி திருமதி மிதிலா சிறீபத்மநாதன் என்பவரே தொலைபேசியை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

கோப்பாய் கோட்ட பாடசாலைகளில் முதலாவது தொலைபேசி வசதியைப் பெறும் பாடசாலை இதுவாகும். (ஷ-215)

## முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கம் அங்குரார்ப்பணம்

(மந்திகை)

வடமராட்சிமுச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இவ் அங்குரார்ப்பண நிகழ்வில் விடுதலைப்புலிகளின் வடமராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் தயா, சிறப்பு பொறுப்பாளர் நிஷாந்தன் ஆகியோரும் கலந்துகொண்டு உரையாற்றினர்.

முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு சுமுகமாக தீர்வு காணவே மேற்படி சங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

(ஷ-23)

# குடாநாட்டில் 48இந்து ஆலயங்களில் வழிபாட்டு உரிமை மறுப்பு

(தென்மராட்சி)

யாழ்ப்பாணக் குடா நாட்டில் இன்னமும் 48இந்து ஆலயங்களில் வழிபாட்டுக்கான உரிமைகள் படையினரால் மறுக்கப்பட்ட நிலையில் இருந்து வருவதாகத் தெரிய வருகிறது.

இதன் காரணமாக இவ்ஆலயங்களை அண்மித்து வாழ்கின்ற மக்களில்ஒருபகுதியினர் தமது வழிபாட்டு உரிமையை நிலைநாட்டுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரியவருகின்றது. (உ-77)

# மத சுதந்திரத்திற்கான மாநாட்டில் பங்கேற்க இலங்கை குழு விரைவு

(கொழும்பு)

ஹங்கேரியில் நடை பெறும் மத சுதந்திரத்துக்கான சர்வ தேச சங்கத்தின் (ஐ. ஏ. ஆர். எவ்.) 31 வது வருடாந்த மாநாட்டில் இலங்கைப் பிரதிநிதிகளும் பங்குகொள்கின்றனர்.

மத சுதந்திரத்துக்கான சர்வதேச சங்கத்தின் இலங்கைப் பீடத்தின் தலைவரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவருமான எம். எஸ். செல்லச்சாமிதலைமையிலான குழுவே ஹங்கேரிக்குச் சென்றுள்ளது.

இங்கிலாந்தில் சர்வதேச செயலகத்தைக் கொண்டுள்ள இந்த ஐ.ஏ. ஆர். எவ். அமைப்பு உலகின் ஆகப் பழமை வாய்ந்த மத நம்பிக்கைகளுக்கான சர்வதேச நிறுவனமாகும்.

1930 ஆம் ஆண்டில் இது அமெரிக்காவில் ஸ்தாபிக்கப் பட்டது.

கனடா, பிரிட்டன், ஒல்லாந்து ஜப்பான், அமெரிக்கா, ஜேர்மனி, இந்தியா, கொரியா, இலங்கை ஆகிய நாடுகளில் இந்த அமைப்பின் மாநாடுகள் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ)

# சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில்

# தொழுநோயாளர் பலர் இனம் காணப்பட்டனர்

## நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் மும்முரம்

(சுதுமலை)

சங்கானை சுகாதாரவைத்திய அதிகாரி பிரிவில் உள்ள சுழிபுரம், காட்டுப்புலம் ஆகிய குதிகளில் 10 இற்கும் மேற்பட்டவர்கள் தொழுநோயால் பாதிக்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன் மேலும் பலர் தொழு நோய்க்கு ஆளாகும் அறிகுறிகளும் இனம் காணப்பட்டுள்ளது.

அண்மையில் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களும் சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்தவர்களும் இணைந்து மேற்கொண்ட ஆய்வின் போது மேற்படி தொழுநோயாளர்கள் இனம் காணப்பட்டனர்.

இதையடுத்து தொழுநோயாளர்கள் மற்றும் தொற்றும் அறிகுறிகள் காணப்பட்டவர்களுக்கு தொடர் சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு கட்டமாக சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையைச் சேர்ந்தபொதுச்சுகாதாரப்பரிசோதகர்கள், குடும்பநல சேவை உத்தியோகத்தர்கள், பயிற்றப்பட்ட சுகாதாரத் தொண்டர்கள் மற்றும் யாழ். மாவட்ட தொழுநோய்த் தடுப்புப் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஆகியோர் இணைந்து எதிர்வரும் 2 ஆம் திகதிவெள்ளிக்கிழமை தொழுநோய்ப்பரிசோதனை ஒன்றை நடந்தவிருப்பதாக மானிப்பாய்- சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே. கணேஸ்வரராஜா தெரிவித்தார்.

இதேவேளை, இப்பகுதிப் பாடசாலைகள், சன சமூக நிலையங்கள் ஊடாக தொழுநோய் விழிப்பு பிரசாரங்கள் மற்றும் வீடியோப் படக்காட்சிகள் என்பன தொடர்ச்சியாக இடம்பெற்றுவருவதும் குறிப்பிடத்தக்கது. (உ-252)

## தலைவர் தெரிவு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சிதெற்கு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் தலைவராக வை. குகராசா மீண்டும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

(உ-264)

## விண்ணப்ப திகதி நீடிப்பு

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கு இலவச சீருடை வழங்குவதற்கான விண்ணப்ப முடிவுத்திகதி இம்மாதம் 26 ஆம் திகதியுடன் முடிவுற்ற போதிலும் ஆகஸ்ட் மாதம் 8 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

(உ-3)

# பாராளுமன்ற நடைமுறைகளை குழப்ப எதிர்க்கட்சிகள் கங்கணம்

## பாராளுமன்றவிவகாரஅமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

அண்மையில் நடந்தது போல பெரிய அளவில் அமளிகளில் ஈடுபட்டு பாராளுமன்ற நடைமுறைகளை குழப்பும் திட்டம் எதிர்க்கட்சிகளின் உயர்மட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளதாக நம்பகமான தகவல்கள் கிடைத்துள்ளதாக பாராளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர்தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்களை ஜேவிபி தூண்டிவிட்டு கிளர்ச்சிகளில் ஈடுபடுத்துவதுடன் பாராளுமன்றத்திலும் அமளிதுமளிகளை ஏற்படுத்தும் திட்டத்தை எதிர்க்கட்சிகள் மிகவுயர்ந்த இடத்தின் ஆசிகளைப் பெற்று செய்யத் திட்டமிட்டுள்ளனர்.

இதற்கு மாற்றுவழிகள் இல்லை. சபாநாயகர் இவற்றைத் தடுக்க கடுமையாக பாராளுமன்ற நடைமுறைகளை எதிர்காலத்தில் அமுல் செய்ய வேண்டியிருக்கும்.

கடந்த காலங்களில் தஹநாயக்க போன்றவர்கள் கூட பாராளுமன்றத்திலிருந்து வெளியேற்றப்பட்டமையையும் அஸ்வர் சுட்டிக்காட்டினார்.

(உ)

# சீருடை விண்ணப்பம்பற்றிய ஊடகச் செய்திகள் பொய்யானவையாம்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்டுவரும் இலவச சீருடை விநியோகம் தொடர்பான திட்டத்தின் கீழ் 2003 ஆம் ஆண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருப்பதாக ஊடகங்களில் வெளியான செய்திகளில் எந்தவொரு உண்மையும் இல்லை என கல்வியமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கல்வியமைச்சின் கேட்போர் கூடத்தில் இவ்வாண்டுக்கான பாடசாலைச் சீருடைகளை வழங்குவதில் ஏற்பட்டகாலதாமதம் குறித்து ஆராயும் நோக்குடன் நடத்தப்பட்ட மாநாட்டிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அடுத்த வருடத்துக்கான சீருடை வழங்கும் திட்டத்தில் பெற்றோருக்கு எவ்வித சிரமமும் ஏற்படாத வகையில் புதிய நடவடிக்கை எடுக்கப் படவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கல்வியமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு, பாடசாலை கல்வியமைச்சர் சுரனிமல ராஜபக்ஷ ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இம் மாநாட்டில் பிரதேச மற்றும் மாவட்டச் செயலாளர்கள், மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்:

(உ-3)

## சமஸ்டி சுதர்சன ஹோமம்

(யாழ்ப்பாணம்)

நாட்டு மக்களுக்கு சமாதானமும் சுபீட்டமான வாழ்வும் வேண்டி சுவாமி பிரபாகரானந்த சரஸ்வதி சுவாமிகளால், சமஸ்டி சுதர்சன ஹோமம் எதிர்வரும் 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணி தொடக்கம் நண்பகல் 12 00 மணி வரை நல்லூர் ஸ்ரீ ராகவேந்திர மிருத்திகா கோவிலில் இடம்பெறவுள்ளது.

(உ-3)

## 'மக்களின் மீள்குடியேற்றத்துக்கென 'கியூடெக்' நிறுவனத்தின் 50 வீட்டுத் திட்டம்

(ஈச்சமோட்டை)

இடம்பெயர்ந்த வறுமைக் கோட்டின் கீழுள்ள மக்களுக்காக கியூடெக் நிறுவனத்தினரால்50 வீட்டுத்திட்டம்அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

மீளக்குடியமர்ந்தோர்க்காக செடக்நிறுவன அனுசரணையுடன் மேற்கொள்ளப்படும் இத்திட்டத்தின்கீழ்ஒவ்வொரு வீடும் 10 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்படுகின்றன.

இளவாலை மாரியன்கூடல், பருத்தித்துறை, வடமராட்சி கிழக்கு,சாவகச்சேரி போன்ற இடங்களில்இத்திட்டம்செயற்படுத்தப்பட்டுவருகின்றது.

இவ் வீட்டுத் திட்டத்தில் இணைய பல நூற்றுக்கணக்கான மக்கள் விண்ணப்பித்திருப்பதனால்இத்திட்டத்தை விரிவு படுத்தும் நடவடிக்கையில் தாம் முனைப்புடன் ஈடுபட்டிருப்பதாக கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்தந்தை சி.ஜி ஜெயக்குமார் தெரிவித்துள்ளார். (ஷ-59)

## ஆலயம் புனரமைப்பு

(கொழும்புத்துறை)

யுத்த நிலைமை காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலயப் புனரமைப்புப் பணிகள், மக்கள் இப்பகுதியில் மீளக்குடியமர்ந்து வருவதை அடுத்து மீண்டும் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன.

இவ்வாலய புனரமைப்பு வேலைகள் 1999 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஷ-262)

★ ★ ★

(உரும்பிராய்)

உரும்பிரராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலய மண்டப திருத்த வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. (ஷ-215)

## கலந்துரையாடல்

(ஈச்சமோட்டை)

யாழ் மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கலைஇலக்கியவட்டத்தின்முக்கிய கலந்துரையாடலொன்று எதிர் வரும் வெள்ளிக்கிழமை மன்ற கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் கலை இலக்கிய வட்ட உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அதன் செயலாளர் கேட்டுள்ளார். (ஷ-59)

## முன்பள்ளிக்கு 50 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு

(மானிப்பாய்)

வலிகாமம் மேற்கு பிரதேச சபையால் நடத்தப்படும் முன்பள்ளி சிறுவர் பாடசாலைக்கு 50ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிதி மூலம் மேற்படி சிறுவர் பாடசாலைக்குத் தேவையான தளபாடங்கள் விரைவில் கொள்வனவு செய்யப்படவுள்ளதாக பிரதேச சபைத்தலைவர் வே. மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

(ஷ-232)

# போதிய பஸ்சேவை இல்லை பணியாளர் சிரமம்

(தென்மராட்சி)

யாழ்ப்பாணப் பகுதியில் இருந்து பஸ் மூலம் கைதடி, சாவகச்சேரி, சங்கத் தானை பகுதிகளிலுள்ள அரச, வங்கி மற்றும் கூட்டுறவு அமைப்புகளில் வேலை செய்யச் செல்வோருக்குப் போதிய பஸ் சேவைகள் இல்லாமையினால் காலை வேளைகளில் உரிய நேரத்துக்குக் கடமைக்குச் செல்ல முடியாமல் பெரிதும் கஷ்டப்படுகின்றனர்.

அதேவேளை, காலை வேளைகளில் முகமாலைக்குச் செல்லுகின்ற வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையின் பஸ் வண்டிகளில் முகமாலைக்குச் செல்பவர்களைத் தவிர ஏனைய பிரயாணிகளை ஏற்றுவதில்லை.

ஆதலால், யாழ்ப்பாணத்தில் இருந்து தென்மராட்சி பிரதேசத்துப் பணிமனைகள் மற்றும் பாடசாலைகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கான பிரத்தியேக பஸ் சேவைகளை காலை வேளையிலும் பிற்பகலிலும் நடத்துவது அவசியம் எனவும் சம்பந்தப்பட்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்: (உ-77)

# வத்திக்கான் போதனைகுழு நேற்று யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பரின் வத்திக்கான் மறை போதனைக் குழுவினர் யாழ்ப்பாண விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று யாழ். ஆயர் இல்லத்திற்கு வந்துள்ளனர்.

நல்லெண்ண விஜயமாக யாழ் வந்துள்ள இக்குழுவினருடன் கொழும்பு பிரதிநிதிகளும் வருகை தந்துள்ளனர். இவர்கள் யாழ். ஆயர், குருமுதல்வர், மறைக் குருக்கள், அருட்சகோதரர்கள் ஆகியோருடன் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளனர்.

இதேவேளை, யுத்தத்தின் கோரப்பிடிக்குள் சிக்கித் தவித்த மக்களையும் சந்தித்து உரையாடவுள்ள இக்குழுவினர் இலங்கைத் தீவில் நீடித்த நிரந்தர சமாதானம் ஏற்பட்டு மக்கள் மனங்களில் சாந்தியும் சமாதானமும் உண்டாக பிரார்த்தனைகளிலும் ஈடுபடவுள்ளனர்.

மனித மாண்புகள் மதிக்கப்பட்டு இன ஒற்றுமை பேணப்படுதலையும் மதங்களின் ஊடாகவே சமாதானம் எட்டப்படுதலையும் வலியுறுத்துவதே இவர்களின் விஜயத்தின் நோக்கமாகும். (ஷ-6)

# மூவினத்தவரும் ஒன்றிணையும் மாபெரும் இளைஞர் முகாம்

## கோப்பாய் மகாவித்தியாலயத்தில்

(தென்மராட்சி)

சர்வோதய இயக்கத்தின் ஏற்பாட்டில் ஓகஸ்ட் 5,6,7 ஆம் திகதிகளில் கோப்பாயில் மாபெரும் இளைஞர் முகாம் ஒன்று நடைபெறவுள்ளது. கோப்பாய் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ள இம் முகாமில் மொத்தமாக 500இளைஞர்-யுவதிகள் பங்கு பற்றுபவர் என யாழ். மாவட்ட சர்வோதய இயக்கத்தின் செயல்திட்ட இணைப்பாளர் எஸ்.வீ.சங்கரப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வோதய இயக்கத்தின் தலைவர் கலாநிதி ஏ.ரீ ஆரியரத்தினாவின்திட்டமிடலின் கீழ் இவ் இளைஞர் முகாம் நடத்தப்படவுள்ளது.

இதில் பங்குகொள்ளவென தென்பகுதி மற்றும் கிழக்கு மாகாணத்தில் இருந்து 3 இனங்களையும் சேர்ந்த மொத்தம் 400இளைஞர்-யுவதிகள் யாழ்.வருகை தரவுள்ளனர்.

இம்முகாமில்பங்கு கொள்பவர்கள் கலாசார நிகழ்ச்சி விளையாட்டு நிகழ்ச்சிமற்றும் சிரமதானப் பணிகளில்ஈடுபடுவார்கள்.

அத்தோடு, சர்வோதய இயக்கத்துடன் இணைந்து கொண்டுள்ள 100 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு இயக்கத்தின் தலைவர் கலாநிதி ஏ.ரீ.அரியரத்தினா அன்பளிப்புக்களை வழங்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (உ-77)

## ஆரம்ப உயிர்த்

இவை கண்ணுக்குப் புலப்படமாட்டா. அந்த உயிரணுக்கள அதே நிலையில் இந்நாளில் காணப்படுகின்றன. காற்றிலும், மண்ணிலும், நீரிலும், தாவர,விலங்குகளின் உடம்பினுள்ளும், நமது உடம்பிலும் பரவி, நாம் அறியாமலேயே அவை தமது வாழ்க்கையை நடத்துகின்றன. உயிர்கள் முதன் முதலாக ஒற்றை உயிரணுக்களாக இருந்தன என்று புலனாகிறது.

டாக்டர். கு. சீனிவாசன்

## நீருக்குத் தட்டுப்பாடு


(யாழ்ப்பாணம்)

கல்வியங்காட்டுச்சந்தையில் தண்ணீர் வசதியின்மையால் அங்கு வாங்குதல் விற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுவோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

(உ-19)

# 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
23
04
1913



மறைவு
31
07
1991

## அமரர். வீ. எம். கணபதிப்பிள்ளை

*(வீ.எம்.கே ஜுவலர்ஸ் சாவகச்சேரி)*

மானிடர் ஆன்மா மரணமெய்தாது
மறுபடி பிறந்திருக்கு மென்பதினால்
மரணங்கள் மனதில் பதித்து விட்ட
மனத்துயரை மாற்றி நீங்கள்
மறுபடி எம்முடன் சேர்ந்திருக்க
மலரும் அந்த நாள் பார்த்து....

*வீ.எம்.கே.*
*டச் றோட்,*
*சாவகச்சேரி.*

ஆவலுடன்,
*வீ.எம்.கே குடும்பத்தினர்.*

# உள்நாட்டுப் போரில் அமெரிக்கா உதவுமென எதிர்பார்த்தால் அது அரசுக்கு ஏமாற்றத்தை அளிக்கும்!

(கொழும்பு)

நாட்டில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகள் சீர்குலைந்து புலிகள் மீண்டும் ஆயுதப் போரில் இறங்கும் பட்சத்தில் அமெரிக்கா தமக்கு உதவும் என ஐக்கியதேசிய முன்னணி அரசு எதிர்பார்த்தால், அது அவர்களுக்கு ஏமாற்றமானதாகவே அமையும்.

இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டார நாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அம்பாறையில் இடம்பெற்ற, நாட்டைத் துண்டாடுவதற்கு எதிரானதும், கௌரவமான சமாதானத்துக்குமான அமைப்பின் பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், தமிழீழ விடுதலைப் புலிகள் அமெரிக்காவில் பாரிய அளவில் நிதி திரட்டும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

அமெரிக்கா எந்தவொரு நாட்டின் பிரச்சினையிலும் தனது நலன் கருதியே தலையிடுவது வழமை.

இலங்கை விடயத்தில் நன்மைகள் எதுவும் கிடைக்கப் பெறாத நிலையில், அமெரிக்கா இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினையில் தலையிடும் என ஒருபோதும் எதிர்பார்க்க முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய பேரியல் அஷ்ரப், முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களின் உரிமைகளை தமிழீழ விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்க மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகளை முறியடிக்க வேண்டும் என அறைகூவல் விடுத்தார். (உ-8)

## முன்பள்ளி விளையாட்டு விழா

(மானிப்பாய்)

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் பிரான்பற்று ஸ்ரீமுருகன் முன்பள்ளி பாடசாலை வருடாந்த விளையாட்டு விழா இன்று பி.ப. 2.00 மணிக்கு பிரான்பற்று கலைமகள் வித்தியாலய மைதானத்தில் பிரதேச சபை உள்ளூராட்சி உதவியாளர் செ. ரமேஷ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரதேசசபைத் தலைவர் வெ. அ. ஜோன்சன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக பிரதேசசபையின் செயலாளர் பிரான்சிஸ் விக்டர், உள்ளூராட்சித்திணைக்கள சனசமூக உத்தியோகத்தர் வே. கந்தசாமி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-232)

## பனை உற்பத்திப் பொருள் கைப்பணிப் பயிற்சிநிலையம்

### 60 மகளிர் பயன்

(யாழ்ப்பாணம்)

பனை அபிவிருத்திச் சபையினால் மாதர்களுக்கான பனை உற்பத்திப் பொருள் கைப்பணிப் பயிற்சி நிலையம் ஒன்று நேற்று முன்தினம் கொய்யாத்தோட்டம் பகுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கியூடெக் நிறுவனமாதர் முன்னேற்றச் சங்கஅங்கத்தவர்கள் உட்பட சுயதொழில் முயற்சியில் ஈடுபடும் 60 மகளிர் இந்நிலையத்தில் பயிற்சிகளை மேற்கொள்கின்றனர்.

இவ்வாறான 7 பயிற்சி நிலையங்கள் இதுவரை குடாநாட்டில் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக பனை அபிவிருத்திச் சபைத்தலைவர் பொ. சிவபாதம் தெரிவித்தார். (உ-6)

## ஊனமுற்றோர் புனர்வாழ்வுத் திட்டம் யாழ். குடாநாட்டில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

சமுதாய மட்டத்தில் ஊனமுற்றோருக்கான புனர்வாழ்வுத் திட்டமொன்றை சமூகநலன்புரி அமைச்சு யாழ். மாவட்டத்தில் ஆரம்பித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழான பயிற்சிப் பட்டறை ஒன்று கடந்த 28,29 ஆம்திகதிகளில் யாழ். மாவட்டசெயலகத்தில் நடைபெற்றது.

இப்பட்டறையில் பிரதேச செயலர்கள், உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சமூக நலன்புரி அமைச்சின் ஊனமுற்றோருக்கு மறுவாழ்வு அளிக்கும் சேவைத் திட்டத்தைச் சேர்ந்த எஸ். சாந்தகுமார, சமூகநலன்புரி அமைச்சின் உதவிச்செயலாளர் எம்.டி.சி. ஜெயமான்ய, மற்றும் களனிப் பல்கலைக்கழக பேராசிரியர் எஸ். கொடிக்காராஆகியோர் இப்பட்டறையை நடத்தினர்.

சமூக நலத்துறை அமைச்சர் நவீந்திர சமரவீர இப்பட்டறையைப் பார்வையிட நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

- அடிமட்டத்தில் உள்ள ஊனமுற்றவர்களை இனங்கண்டு அவர்களின் தேவைகளை நிறைவு செய்வதை நோக்கமாகக் கொண்டே இப்பட்டறை ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. (ஷ-6)

## பரீட்சை

(கொய்யாத்தோட்டம்)

யாழ். பல்கலைக்கழக சித்திரமும் வடிவமைப்புத் துறைக்கு 2002-2003 ஆம் கல்வி ஆண்டுக்கான மாணவர்களை தெரிவு செய்வதற்கான பரீட்சை எதிர்வரும் 24 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இப்பரீட்சைக்கு விண்ணப்பித்தமாணவர்களுக்கான அனுமதிஅட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (உ-22)

## விளையாட்டுத் துறையை வளர்க்க பாடுபடுவோம்

### கியூடெக் இயக்குநர்

(தென்மராட்சி)

விளையாட்டுப் போட்டிகள் மூலம்எமது மாணவ சமுதாயம் பல பாடங்களையும்அனுபவங்களையும் பெற்றுக் கொள்ள முடியும். எனவே விளையாட்டுத்துறையை நாம் ஊக்கம் கொடுத்து வளர்க்கப் பாடுபடவேண்டும்.

கியூடெக் நிறுவனத்தின் இயக்குநர் வண பிதா சீ. ஜீ. ஜெயக்குமார் அடிகள் கைதடி மேற்கு அறவழிசரஸ்வதி மழலைகள் கல்விப்பூங்காவின் மெய்வல்லுநர் போட்டியில் பிரதமவிருந்தினராக பங்கு கொண்டு உரையாற்றும் போது இவ்வாறு குறிப்பிட்டார்.

பூங்காவின்வளர்ச்சிக்குழுத் தலைவர் திருமதி ஷாந்தினி தலைமையில் நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டியில் எழுந்தாளர் ஜோசப்பாலா, சாவகச்சேரிமக்கள்வங்கியைச் சேர்ந்த திருமதி ஈஸ்வரிஜீவகதாஸ் கிராமசேவையாளர் சு. செல்வராஜா ஆகியோர் சிறப்புவிருந்தினர்களாக பங்கு கொண்டனர்.

வண.பிதா ஜெயக்குமார் அடிகள்அங்குமேலும் பேசுகையில்;

கைதடிமேற்கு கிராமம்பல வகைகளிலும்வளர்ச்சி பெற்று வருவதுகுறித்துமகிழ்ச்சியடைகின்றேன். இக்கிராமத்து இளைஞர்களின் கலையார்வம், விளையாட்டு ஆர்வம் பற்றி நாம் நன்கு அறிவோம் எனக் கூறினார். (உ-77)

## அமைச்சர் டிரோன் மலேசிய வெளிவிவகார அமைச்சரைச் சந்திப்பு

(கொழும்பு)

கடல்வளங்களைக்கொண்டு உச்சப்பயனைப் பெறுவதற்கான சகல நடவடிக்கைகளுக்கும் ஒத்துழைப்பு வழங்குமாறு வெளிவிவகாரஅமைச்சர் டிரோன் பெர்னாண்டோ மலேசிய அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இருநாள் விஜயத்தை மேற்கொண்டு மலேசியா சென்றுள்ளஅவர் அந்நாட்டுவெளிவிவகார அமைச்சரைச்சந்தித்து உரையாடியபோதே இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மலேசியாவின் தேசிய பெற்றோலிய நிறுவனமான பெற்றோனாஸுடன் இது தொடர்பாக பேச்சுவார்த்தை ஒன்றை ஆரம்பிக்க விருப்பதாகவும் அமைச்சர் டிரோன் தெரிவித்துள்ளார்.

இவற்றின் மூலமாக இவ்விரு நாடுகளும், பொருளாதார ரீதியிலான நடவடிக்கைகளில் இணைந்து செயற்படுவதுகுறித்தும் ஆராய்ந்துள்ளனர். (உ-8)

## ஆயுள் வேத மருந்துகளுக்கு தட்டுப்பாடு

(மானிப்பாய்)

வலிகாமம் மேற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட உப அலுவலகங்களில் இயங்கும் ஆயுள்வேத வைத்தியசாலைகளுக்குச்சிகிச்சை பெறச்செல்லும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து உள்ளமையால் ஆயுள்வேத மருந்துப் பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பற்றாக்குறையான மருந்துகளை பெற்றுத்தர ஆவன செய்யுமாறு பிரதேச சபைத் தலைவர் வே. மகேந்திரனிடம் கோரப்பட்டுள்ளது. (உ-232)

## ரஷ்யத் தலைநகரில் பயணிகள் விமானம் வீழ்ந்து நொருங்கியது

### 14 பேர் உயிரிழந்தனர்

(மொஸ்கோ)

ரஷ்ய தலை நகர் மொஸ்கோவில் பயணிகள் விமானம் ஒன்று நேற்று முன் தினம் வீழ்ந்து நொருங்கியதில் அதில் பயணம் செய்த 14 பேர் உயிரிழந்தனர். இருவர் பலத்த காயங்களுடன் உயிர் தப்பியுள்ளனர்.

மொஸ்கோவிலுள்ள தோமஸ் ஜோன் விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட இந்த விமானம் சில நிமிடத்தில் காட்டுப் பகுதி ஒன்றில் வீழ்ந்து நொருங்கியது.

இச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களுடைய சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. விபத்துக்கான காரணத்தைக் கண்டறியும் முகமாக விமானத்தின் கறுப்புப் பெட்டியை தேடிக் கண்டு பிடிக்கும் முயற்சியில் மீட்புப் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

சுமார்3 50 பேர் பயணம் செய்யக் கூடிய இந்த விமானத்தில் 16 பேர் பயணம் செய்ததினால் பாரிய உயிரிழப்பு தவிர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த)

## ஒஸாமா பாகிஸ்தானில் ஒளிந்து வாழ்கிறார்

### இந்திய பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

(புதுடில்லி)

ஒஸாமாபின்லேடன்பாகிஸ்தானில் ஒளிந்திருப்பதாக இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணாண்டஸ் இலண்டன் தொலைக்காட்சிச் சேவையொன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் பாதுகாப்பான ஓரிடத்தில் ஒஸாமா பின்லேடன் ஒளிந்திருப்பதாக, முக்கியமான தரப்பு ஒன்றின் மூலம்தகவல் கிடைத்துள்ளது என அவர் அப்பேட்டியில் தெரிவித்துள்ளார்.

எனினும், பாகிஸ்தான் இந்தச் செய்தியினை மறுத்துள்ளதுடன், இந்தியாவின் பொய்ப் பிரசாரம் இதுவென அதே செய்தி சேவைக்கு பாகிஸ்தான் ஜனாதிபதி பெர்வேஷ் முஷாரப்பின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (உ-8)

## உள ரீதியாக ஏற்படுவதே உண்மையான சமாதானம்

### மத்திய கல்லூரி அதிபர் தெரிவிப்பு

(தென்மராட்சி)

சமாதானம் என்பது உள ரீதியாக ஏற்பட வேண்டும். சமாதானத்துக்கு மொழி அவசியமல்ல. பார்வையே போதும். இதனை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற சாரணர்களின் சமாதானப் பாசறை வெளிப்படுத்தியுள்ளது.

யாழ். மத்திய கல்லூரியின் அதிபர் க. இராஜதுரை இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து குறிப்பிடுகையில்;

சமாதானத்தினை அடைவதற்கு இன்று எத்தனையோ கருமங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவற்றில் சாரணர்களின் சமாதானப் பாசறை உண்மையிலே வித்தியாசமானதாக அமைந்திருந்தது.

கொழும்பு நாலந்தாக் கல்லூரியின் சாரணர்களும், யாழ். குடாநாட்டு சாரணர்களும் எவ்விதம் தொடர்பு கொள்வார்கள், கருத்துக்களைப் பரிமாறுவார்கள் என நான் ஆரம்பத்தில் மிகவும் சிந்தித்ததுண்டு

ஆனால் சாரணர் பாசறை ஆரம்பமாகி ஒரு சில மணித்தியாலங்களில் தென்பகுதி மாணவர்களுடன் எமது மாணவர்கள தமது பார்வைகளில் தொடர்புகளை வலுப்படுத்தி- உறவைப் பேணி அன்பை வளர்த்து, சமாதானத்தை உருவாக்கினர்.

இத்தகைய நிலைப்பாடு பாராட்டப்பட வேண்டியதாகும். இதுபோன்ற நிகழ்வுகள் மேலும் உருவாக்கப்படுவதன் மூலம் இருபகுதி மாணவர்கள் மத்தியில் சமாதானம், அன்பு நிச்சயம் கட்டியெழுப்பப்படும் எனக் குறிப்பிட்டார். (உ-77

...ளச் செறுநர்
...நக்கறுக்கும்
...பது இல்.
குறள்

...ம்புரி

...கின்ற
...ாதாரம்

விடுதலைப்
...புரிந்துணர்வு
...சய்ததன் பய
...கண்டி வீதி
...ர் பாவனைக்
...டப்பட்டது.
...ந்த பல வரு
யுத்தத்தின்
...க்குண்டு கிடந்
யாழ் குடா
மக்கள் வெளி
...ங்களுக்குச் செல்
...ப்பட்ட கஷ்டங்
வெறும் மனித
...ழிகளில் எழுதிவிட
முடியாது.

அதேநேரம், விமான, கப்பல் பயணச்சீட்டைப் பெறுவதற்காக மக்கள் தவம் கிடந்ததை எண்ணும்போது ஏ-9 பாதையின் அருமை உணரப்பட்டது. ஏ-9 பாதை திறப்பால் யாழ். குடாநாட்டு மக்களே அதிக நன்மையைப் பெறுவார்களென எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், எதிர்பார்ப்புக்கு மாறாக, குடாநாட்டு மக்களை விட, தென்னிலங்கை மக்களின் யாழ்ப்பாணவருகை பெருமளவால் அதிகரித்துள்ளது.

யாழ் குடாநாட்டு மக்கள் கொழும்பு செல்வதாயின் அதற்குஉறவினர்களைப் பார்வையிடல், மருத்துவசிகிச்சை, வெளிநாடு, வேலைவாய்ப்பு என்பதே காரணமாக இருக்கும். ஆனால் தென்னிலங்கை சிங்கள மக்களைப் பொறுத்தவரை அவர்களின் யாழ் வருகைக்கு மேற்கூறப்பட்டவை எவையும் காரணமல்ல. மாறாக உல்லாசப் பயணம், வியாபாரம் என்ற இரண்டு காரணங்களை மையமாகவைத்தே யாழ்வருகை இடம்பெறுகிறது.

இவர்களின் வருகைக்கு வாத்தகமே பிரதானகாரணமாக இருப்பதால் யாழ் குடாநாட்டின் பொருளாதாரம் பெருமளவில் தென்னிலங்கைக்கு எடுத்துச்செல்லப்படுகிறது. அதாவதுதென்னிலங்கை உற்பத்திப் பொருட்கள் கணிசமான அளவு யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்யப்படுகிறது. அதேவேளை யாழ்ப்பாணத்திலிருந்து எந்த உற்பத்திப்பொருட் களையும் கொள்வனவு செய்வதாகத் தெரியவில்லை. இந்நிலையில் யாழ்ப்பாணத்துப் பணம் தென்னிலங்கைக்குக் கடத்தப்படுகிறது. அதேவேளை யாழ்ப்பாணத்து உற்பத்திகள் தென்னிலங்கையிலிருந்து பணத்தை வரவழைப்பதாக இல்லாமை பெரும் குறைபாடாகும்.

# செவிச் செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை

# குறைவாகப் பேசி நிறைவாகக் கேட்டுணர்

‘கேள்வி ஒரு செல்வம் அதுவும் மிக உயர்ந்த செல்வம்’ என்பது வள்ளுவர் கருத்து. இதனை ‘செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம் அச் செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை’ என்ற திருக்குறள் மெய்ப்பிக்கும். பத்து ஆண்டுகள் படித்து அறிபவைகளை, முப்பது ஆண்டுகள் பார்த்து அறிபவைகளை ஐம்பது ஆண்டுகள் ஆராய்ந்து அறிபவைகளை, ஐந்தாறு மணித்துளிகளில் கேட்டு அறிந்து கொள்ளலாம். இதனாலேயே கேள்விச் செல்வம் தலை சிறந்த செல்வம் எனக் கருதப் பெற்று வருகிறது.

கற்றலிற் கேட்டல் நன்று

‘கல்வியைவிட உயிர்க்கு உற்றதுணை வேறில்லை’ என்று கல்விச் செல்வத்தை உயர்த்திக் கூறிய வள்ளுவர் ‘கற்றிலனாயினுங் கேட்க’ எனக் கூறியிருப்பதும் பிறர் ‘கற்றலிற் கேட்டலே நன்று’ எனக் கூறியிருப்பதும் கேள்விச் செல்வத்தின் சிறப்பை உணர்த்துவனவாகும். மக்களுக்கும் விலங்குகளுக்கும் உள்ள வேற்றுமைகள் பல அவற்றுள் ஒன்று ‘மக்கள் செவி வழியாகவும் சுவையைப் பெறுவார்கள் மாக்களால் இயலாது என்பது. ‘உணவு’ என்பது வாயால் உண்பது ‘உணர்வு’ என்பது செவியால் பெறுவது. வள்ளுவர் இவ்விரண்டையும் மாற்றி அமைத்திருப்பது வியப்பிற்குரியதே இதனைச் ‘செவிக்கு உணவு’ என்பதாலும் ‘வாய் உணவின் மாக்கள்’ என்பதாலும் நன்கறியலாம். இவை இவற்றின் உயர் இழிவையும் உணர்த்த வந்தன போலும்.

செவிக் குணவு இல்லாத போது தான்வயிற்றுக்குசிறிது உணவளிக்க வேண்டும் என்பது வள்ளுவர் நெறி. இதனால் கேள்விச் செல்வத்தைப் பெறவாய்ப் புள்ள போது உண்பதைக் கூட ஒத்திவைக்க வேண்டும் என்றாகிறது. ‘கேள்வி ஒரு செல்வம்’ என்பதால் எதையும் எவரிடமும் கேட்டு விடக் கூடாது. கேட்கும் போது ‘கேட்டுத்தான் ஆக வேண்டுமா’? என்று உன்னையே நீ ஒருகேள்வி கேட்டுக் கொள் பிறகு யோசித்துக்கேள். அவனும் யோசித்துப் பதில் கூறுவதை மட்டுமே கேள், அதையும் குறைவாகவே கேள், சுருக்கமாகக் கேள், அதையும் மெதுவாகக் கேள், இதுவே, கேள்விச் செல்வத்தைப் பெறும் சரியான வழி.

அறிவற்றவர்களிடம் எதையும் கேட்டுவிடாதே. அதனால் இரண்டுவகையான துன்பம் வரும். முதலாவது அவன் தவறாகவும் பதில் கூறிவிடுவான். இரண்டாவது அவன் தன்னைவிட உன்னை மட்டமானவன் என்றும் கருதிவிடுவான். ஆகவே, அறிவாளிகளிடம் மட்டுமே கேள், அதில் இலாபம் கிடைக்காமற்போய் விடினும் நட்டத்திற்கு வழியேயிராது. ஓயாமற் கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருப்பவன் ஓட்டைவாயன். தேவையற்ற கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருப்பவன். மூடன். இழிவான கேள்விகளைக் கேட்பவன் மோசமானவன், தெரிந்து கொண்டு கேள்விகளைக் கேட்பவன் கலகக்காரன், தெரிந்து

முத்தமிழ்க் காவலர்

## கி. ஆ. பெ. விசுவநாதம்

கொண்டதாக நினைத்துக் கொண்டு கேள்விகளைக் கேட்பவன் அறிவற்றவன். தெரிந்து கொள்ள விரும்பித் துடிதுடித்துக் கேள்விகளைக் கேட்பவன் பொறுமையற்றவன், அறியவேண்டியதை அறிந்து கொள்ளவிரும்பித் தகுதியுடையவர்களை அணுகி அமைதியாகக் கேட்டு அறிபவன் அறிஞன்.

இரண்டுவழிகள்

ஒருமனிதனை ‘யார்?’ என்று அறிய இரண்டுவித வழிகள் உள்ளன. ஒன்று அவனுடைய நண்பர்கள் ‘யார்?’ என அறிந்து கொள்வது. மற்றொன்று அவனுடைய கேள்விகள் என்னென்ன? என அறிந்து கொள்வது முன்னது அவனுடைய நடத்தையையும், பின்னது அவனுடைய அறிவையும் தெளிவாகக் காட்டிவிடும். ‘சாதுக்கு சாது மிலாதோ சங்கே கர்கே ஞானகே தோதோ பாத், கத்தைக்கு, கத்தை மிலாதோ தோதோ மாறேலாத்’ என்பது ஒரு இந்துஸ்தானிப் பழமொழி, சாதுக்களும் சாதுக்களும் சந்தித்துக் கொண்டால் இரண்டொரு பேச்சுக்கள் மட்டுமே பேசுவார்கள். அதுவும் சந்தேகத்தைப் போக்கக் கூடியதாக இருக்கும் அதுவும் ஞானமார்க்க மானதாகவேயிருக்கும். கழுதையும் கழுதையும் சந்தித்துக்கொண்டால் ஒவ்வொன்றும் மறுபக்கம் திரும்பிக் கொண்டு ஆளுக்கு இரண்டு உதை கொடுத்துக்கொள்ளும்’ என்பது இதன் பொருள். கேள்வியின் சிறப்பையும் சந்திப்போரின் தகுதியையும் விளக்க இதைவிட நல்ல பழமொழி வேறில்லை.

கேள்விச் செல்வத்தைப் பெறும் வழியும் இரண்டு. ஒன்று கேட்டு அறிவது, மற்றொன்று கேளாமல் அறிவது. ‘சொல்லாமற் சொல்லுதல்’ என்பது குறிப்பினால் உணர்த்துதல், நினையாமல் நினைத்தல்’ என்பது மறந்து நினையாமல், மறவாமலே நிலைத்திருத்தல். ‘போகமற் போதல்’ என்பது எங்கு போகிறோம்? என்ற எண்ணமேஇல்லாமற் போதல், ‘கேளாமற் கேட்டல்’ என்பது நாமாகக் கேளாமல் பிறர் தாமாகச் சொல்வதைக் கேட்டல். கேளாமற் கேட்கும் இடங்கள் பேச்சுமேடை, இசையரங்கு, நாடகக் கொட்டகை, நிழற்படக் கொட்டகை, இரயில் நிலையம், ஆற்றங்கரை, குளத்தங்கரை, தண்ணீர்க்குழாய் முதலியன.

வண்டியோட்டிகள்

கேளாமற் கேட்கும் வாய்ப்பை இயல்பாகப் பெற்றவர்கள் வண்டியோட்டிகளே. மாடு, குதிரை, ரிக்சா, மோட்டார் வண்டிகளிற் பயணஞ் செய்வோர் வண்டியோட்டி ஒருவன் இருப்பதாகக் கூட எண்ணாமல் தாங்கள் மட்டுமே தனித்திருப்பதாக நினைத்துப் பேசக் கூடாதவைகளை யெல்லாம் பேசிக்கொண்டே போவார்கள். வண்டியோட்டிகளுக்குத் தெரியாத செய்தி ஊரில் எதுவுமேயிராது! இந்த வண்டியோட்டிகள் மற்றவர்களை விடத் திறமைசாலிகளாகக் காணப்படுவது இதன் பொருட்டேயாம். இங்கிலாந்தில் ஒரு வண்டியோட்டி சிறந்த எழுத்தாளனாக மாறிப் பெரும் பொருள் திரட்டிவிட்டானாம். அவன் முதலில் எழுதி வெளியிட்ட நூலின் பெயர் என்ன தெரியுமா? ‘என் காதில் விழுந்தவை’ என்பதே. அவனைப் பொறுத்தமட்டில் கேள்வி அவனுக்குச் செல்வமாகவே மாறிவிட்டது.

ஆகவே, நீகேளாமற் கேட்கும் செல்வத்தையே மிகுதியாகப்பெறும். நீயாக எதையும்அவசரப்பட்டுக் கேட்டு கொண்டிராதே. அவர்களே சொல்லும் படியான ஒரு சூழ் நிலையை உண்டாக்கு. அப்போது அவர்கள் சொல்லவில்லையானால் சிறிது பொறுத்திரு. தானாக யாவும் வெளிவந்து விடும், இரண்டொரு மணித்துளிகளுக்குப் பிறகு அறியக் கூடியதை முன்னதாக அறியத் துடிதுடித்துப் பலரையும்கேட்டுக்கொண்டேயிராதே. அது உன் தகுதியைக் குறைத்துக் காட்டிவிடும். பல்லாண்டுகளுக்கு முன்பு நான் பயணஞ் செய்து வந்த வண்டியில் பலர் பலவாறு பேசிக்கொண்டு வந்தார்கள். சிலர் சில கேள்விகளைக் கேட்டுக் கொண்டே வந்தார்கள், அவை ஒவ்வொன்றும் அவரவர் தகுதியைக் காட்டிக் கொண்டே இருந்தன. ஏன் நீங்கள் கூட எளிதாகப் போடலாம். அவர்களின் கேள்விகளும் இவைதான்....

‘வரியெல்லாம் இன்னமே இருக்காது இங்கிறாங்களே நிசமாங்க?

‘மணி அடிச்சாத்தான் வண்டி வருமுங்கிறாகளே எப்படிங்கோ?

அறிவுக்குப் புள்ளி போடுதல்

இப்படி இவர்கள் கேளாதிருந்தால், அவர்களது அறிவிற்குப் புள்ளி போட நம்மால் முடியுமா? அவர்களது கேள்விகள் தாமே அவர்களது அறிவை நமக்குக் காட்டிக் கொடுத்தது, அந்த வண்டியிலேயே எதுவும் பேசாமல் பயணம் செய்து வந்தவர்கள் இருவர். வண்டி நின்றதும் அவர்களில் ஒருவரை அணுகி, ‘ஐயா தாங்கள் எந்த ஊர்? என்ன வேலை? எங்கு செல்லுகிறீர்கள்? என அன்பாகக் கேட்டேன், அதற்கு அவரிடமிருந்து. புன் சிரிப்பு மட்டுமே வெளிவந்தது. நான் அவரது அறிவுக்கு நூறு புள்ளிகள் குறித்துக் கொண்டு மிகவும் மரியாதையுடன், நீங்கள் தமிழகத்திற்கே ஒரு வழிகாட்டி, மிகவும் நன்றி’ எனக் கூறிக் கொண்டிருந்தேன், உடனே பக்கத்தில் இருந்தவர், ‘ஏய்யா இந்தத் தொந்தரவு? பேசாம ஊருக்குப் போய் சேருங்கையா, அவர் ஊமை என்றார். அவர் எனது அறிவுக்கு எத்தனை புள்ளி போட்டிருப்பாரோ தெரியாது. ஆனால் எனது அறிவுக்கு என்னால் ஒரு புள்ளியும் போடமுடியவில்லை. நானும் இக் கேள்விகளைக் கேளாமல் பயணம்செய்திருக்கக் கூடாதா? என எண்ணி வெட்கினேன்.

கேள்விகேட்பதற்கு மட்டுமல்ல, கேட்டவர்களுக்கு விடைஅளிப்பதற்குக் கூடப் பொறுமைவேண்டும். விடை கூறுமுன் விழிப்பாகவும், விடைகூறுவது சுருக்கமாகவும், இருக்கவேண்டும். செல்வத்தைச் சேமித்து வைப்பதைப்போல, சில பெரியவர்கள் அறிவையும், அனுபவத்தையும் சேமித்து வைத்திருப்பார்கள். அவற்றைப் பெறவிரும்பி வருபவர்ளுக்குத் தகுதியறிந்து, அளவோடு சிறிது வழங்குவது ‘கொடைத்தன்மை’ எனவும் அதையும் வழங்கமறுப்பது கர்மித்தனம்’ எனவும் கருதப் பெறும். ஆனால் அந்தவிடை எவருக்கும் தீமை பயவாததாக இருத்தல்வேண்டும்.

ஒருவன் உன்னிடம்வந்து ‘அவன் பணம்தர மறுக்கிறான். கோர்ட்டில் வழக்குப் போடலாமா?’ எனஒருகேள்வி கேட்பான். போடு என்றாலும் வேண்டாம் என்றாலும் இரண்டுவிதமான துன்பங்கள் வந்துசேரும். அதுவும் அவனிடமிருந்தும் அவனது எதிரியிடமிருந்தும் பல உருவெடுத்துவரும். இறுதியில் அவைகளை எதிர்த்துப் போராட வேண்டியநிலை உனக்கே ஏற்பட்டுவிடும். ஆகவே இப்படிப்பட்ட சமயங்களில் உனதுவிடை ‘நன்றாகயோசித்துச்செய்யுங்கள்’ என்றிருப்பதே நன்மை பயப்பதாகவிருக்கும், கேள்விகளுக்கு விடையளிப்பதில் வக்கீல்களும், டாக்டர்களும்

(3ஆம் பக்கம் பார்க்க)

## தினசரி தியானம்

### பட்ச பாதம்

மாலுங்காட்டி வழிகாட்டி வாரா உலக நெறியேறக்
கோலங்காட்டி ஆண்டானைக் கொடியேன் என்றோ
கூடுவதே?

-மாணிக்கவாசகர்.

தராசு முள் எடையை உள்ளபடி காட்டுவதுபோன்று தேவே, எனக்குரியதை நீ நேர்மையுடன் நல்குகின்றாய்,

இயற்கையின் நடைமுறை நேர்மையே வடிவெடுத்து, பட்சபாதம் அதனிடத்தில்லை. அதை எதிர்த்தால் துன்பம் வருகிறது. அதை அனுசரித்தால் இன்பம் வருகிறது. தவறுதலுக்குத் தண்டனையில்லாது போய்விட்டால் நேர்மைக்கு வெகுமதியும் இல்லாதுபோய்விடும். அத்தகைய நிலையே பட்சபாதம் எனப்படுவது, இறைவனுடைய ஆதிக்கத்தில் பட்சபாதத்துக்கு இடம் இல்லை. வினைக்கேற்ற வினைப்பயனை அவர் விதித்துள்ளார்,

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

# பாகிஸ்தான் ஜனாதிபதி இன்று கொழும்பு வருகை

## பிரதமர், ஜனாதிபதியை சந்திப்பார்

(கொழும்பு)

பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் பர்வேஷ் முஷாரப் இன்று அதிகாலை விமானம் மூலம் கொழும்புக்கு வரவுள்ளார்.

கொழும்பு வரும் பாகிஸ்தான் ஜனாதிபதி இன்று காலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவைச் சந்தித்து பேசவுள்ளார். இப் பேச்சுக்களின்போது அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே இடம்பெற்றுவரும் சமாதான முயற்சிகள் தொடர்பாக பிரதமர் ரணில் விளக்கிக் கூறுவார்.

இப்பேச்சு வார்த்தைகளை அடுத்து பாகிஸ்தானுக்கும், இலங்கைக்குமிடையிலான வர்த்தக ஒப்பந்தமொன்றில் இரு தலைவர்களும் கைச்சாத்திடவுள்ளனர்.

இதனை அடுத்து ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவையும் இன்று மாலை சந்தித்துப் பேசவுள்ளார்.

இவரது இலங்கைக்கான விஜயத்தை அடுத்து பாதுகாப்பு ஏற்பாடுகள் யாவும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

(ம)

---

### தச்சனாமடு...

வேளை மேற்படி படுகொலைச் சம்பவம் தொடர்பான புலன் விசாரணைகளை மேற்கொள்வதற்கு 3 பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த)

---

### மட்டு எம்பியின்...

ஆனால் இச்சம்பவத்தில் காயம் அடைந்த இளைஞர்கள், தாம் வீதியால் சென்று கொண்டு இருந்த பொழுது பொலிஸார் தமது முகத்தின் மீது ரோச் வெளிச்சத்தைப் பாச்சியதாகவும் இதன்போது ஏற்பட்ட வாக்குவாதத்தை அடுத்தே பொலிஸார் தம்மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகவும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள தங்கவடிவேல் இதற்கு முன்னரும் இரண்டு தடவைகள் மேற்படி இளைஞர் குழுவினர் தமது வீட்டிற்கு முன்பாக அட்டகாசம் புரிந்து வந்ததாகவும் இது தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது என்றும் கூறினார்.

காயமடைந்த ஆறு இளைஞர்களும் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(த)

---

### கண்ணிவெடி...

அதேவேளை கண்ணிவெடி அகற்றும் பணி ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து கடந்த 23ம் திகதி வரை 609 கண்ணி வெடிகளும் 59 வெடிபொருட்களும் மீட்க்கப்பட்டு செயலிழக்க வைககப் பட்டுள்ளதாக அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த)

---

### 13 விடுதலை...

பொறுப்பாளர் செம்மணன் தலைமையில் 5 பெண் போராளிகள் உட்பட 13 பேர் எழுவைதீவு சென்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(இ-75)

---

### வடமராட்சி...

அங்கு இந்திய மீனவர்களின் அத்துமீறிய நுழைவும், அவர்களின் தொல்லைகளும் தம்மை பாதிப்பதாக மீனவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

(இ-23)

---

### நாட்டை...

தீர்வே நாட்டிற்கு அவசியமாகும்.

கடந்த கால யுத்தம் காரணமாக சுமார் 50, 000 மக்கள் தங்களது இன்னுயிரை இழந்துள்ளனர்.

இத்தகைய அழிவுகளை தடுக்க வேண்டும் என்பதே எல்லோருடைய விருப்பமுமாகும், சமாதான முயற்சிகை கூடி வரும்போது சகலரும் புத்திசாதுரியத்துடன் நடந்து கொள்ள வேண்டும்.

தற்போதைய அரசு மேற்கொண்டுவரும் சமாதான முயற்சிகளை வரவேற்று எனது பூரண ஒத்துழைப்பை வழங்கி வருகின்றேன்.

நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வரும் வேளையிலும் நாட்டைப் பாதுகாப்பதற்கு படையினர் உசார் நிலையில் இருக்க வேண்டும்.

ஆயுதப் படையின தலைமை தலைவியாக இருக்கும் நானும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் அரசாங்கமும் தேவையான எதனையும் செய்வதற்கு தயாராக இருக்கின்றோம் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

படை வீரர்களுக்கான விருதுகளை ஜனாதிபதி சந்திரிகாவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் வழங்கிக் கௌரவித்தனர்.

இவ் வைபவத்தில் முப்படை தளபதிகள், படை உயர் அதிகாரிகள், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(வ)

---

### பிரதமருடன் கூட்டமைப்பு நாளை சந்திப்பு

(கொழும்பு)

வலிகாமம் வடக்கு தென்மராட்சிப் பகுதிகளில் மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்பிக்கள நாளை முதலாம் திகதி சந்திக்க உள்ளனர்.

பிரதமரின் வாசஸ்தலமான அலரி மாளிகையில் இச் சந்திப்பு இடம்பெறும்.

(ம)

---

### யாழ்ப்பாணத்தில் இரண்டுநாள் கருத்தரங்கு

(கொழும்பு)

பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்பான கருத்தரங்கு ஒன்று ஆகஸ்ட் மாதம் 3ம்,4ம் திகதிகளில் யாழ்ப்பாணம் சென் ஜோண்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடைபெவுள்ளது.

இக் கருத்தரங்கில் யாழ் மாவட்ட எம்.பியும் சட்டத்தரணியுமான அ.விநாயகமூர்த்தி கொழும்பு சட்டக கல்லூரி விரிவுரையாளர் வி.ரி.தமிழ் மாறன் சட்டத்தரணி டபிள்யு.ஈ.அபயக்கோன் உட்பட பிரபல சட்ட வல்லுநர்கள் இக் கலந்துரையாடலில் கலந்து கொள்கிறார்கள்.

இக் கருத்தரங்கை அடுத்து 4ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பான பத்திரிகையாளர் மாநாடு ஒன்றும் நடைபெறவுள்ளது.

(வ)

---

### 4 இல[...] அவுஸ்ரே[...]

(...)

சட்ட வி[...] மூலம் அவுஸ்[...] களைக் கொன[...] அவுஸ்ரேலியப்[...] செய்யப்பட்ட [...] வருக்கு அவுள[...] 5 வருட சிறை[...] துள்ளது.

கடந்த செ[...] திகதி 65 சட்ட [...] வாசிகளை ஏற்[...] கையிலிருந்து [...] படகு அவுஸ்[...] நுழைந்தபோது [...] ஸாரினால் பட[...] துடன் அதில் [...] அனைவரும் [...] ருந்தனர்.

---

### கொக்குவில் [...] இன்று தமி[...]

(யாழ்ப்பாண[...])

கொக்குவில் இந்து[...] யின் தமிழ்ச் சங்கம் நட[...] விழா இன்று காலை [...] சங்கத் தலைவர் நி.[...] தலைமையில் கல்லூரி [...] தில நடைபெறும்.

இந் நிகழ்வில் கல்லூரி[...] பொ.கமலநாதன் வாழ்த்து[...] யும், இ.மா.சிவசுப்பிரமணியம்[...] க்க உரையையும் நிகழ்த்[...]

யாழ் பல்கலைக் கழக[...] த்துறை விரிவுரையாளர் க.[...] தாகரன் பிரதம விருந்தின[...] கலந்து கொள்வார்.

---


யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

நிறுவுநர் நினைவுநாளும்

பரிசு வழங்கல் தினமும் - 2002

இடம் : தம்பர் மண்டபம்

காலம் : 01.08.2002 வியாழக்கிழமை (நாளை) காலை 9.00 மணி

பிரதம விருந்தினர்: பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை

பரிசில் வழங்கல் : திருமதி இ.பாலசுந்தரம்பிள்ளை

மேற்படி நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு சகலரையும் அன்புடன் அழைக்கின்றோம்

திரு. ஜீ. பற்குணராசா
செயலாளர்,
ப.அ.சங்கம

க. இராசதுரை
அதிபர்

திரு. க.அருள்வேல்
தலைவர்,
பழைய மாணவர் சங்கம்


---

### சட்ட விரோதமாக 53 இலங்கையருடன் நியூசிலாந்து செல்கிறது பட[...]

(கொழும்பு)

சட்டவிரோதமாக நியூசிலாந்திற்குள் நுழையும் பொருட்டு 53 இலங்கையர்களுடன் படகு ஒன்று சென்றுகொண்டிருப்பதாக ஜகார்த்தாவிலுள்ள இலங்கைத் தூதுவர் வெளி விவகார அமைச்சுக்கு அறிவித்துள்ளார்.

இந்தப் படகு எரிபொருட்களை நிரப்புவதற்காக கிழக்குத் தீமோரிலுள்ள புலித்துறைமுகத்திற்கு வந்ததாகவும், துறைமுக அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டதில் அரசியல் தஞ்சம் கோரி தாம் நியூசிலாந்திற்கு செல்வதாக [...] இருந்தவர்கள் தெரிவித்த[...] கூறப்படுகிறது.

படகில் சென்றவர்[...] இராணுவத்திலிருந்து தப்பி[...] இருவரும் பாதாள உலகக்[...] டியைச் சேர்ந்த ஒருவரும் [...] வதாகத் தெரிவிக்கப்படுகி[...]

இவர்கள் பற்றிய தகவல்[...] பெறும் பொருட்டு குற்றப்புல[...] பிரிவினர் நியூசிலாந்தி[...] சர்வதேச பொலிஸின் உத[...] நாடியுள்ளனர்.

---

### வை.கோ.சிறையில் இருந்தவா[...] வானொலி கேட்பதற்கு அனும[...]

(புதுடில்லி)

ம.தி.மு.க பொதுச் செயலாளர் வை. கோபாலசாமி சிறையில இருந்தவாறு வானொலியைப் பயன்படுத்துவதற்கு சென்னை உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

சிறையில் இருந்தவாறு வானொலி கேட்பதற்கு அனுமதிக்குமாறு சிறைச்சாலை அதிகாரிகளிடம் வை.கோ விண்ணப்பித்து இருந்தார். எனினும் சிறைச்சாலை அதிகாரிகள்[...] குறித்து எந்தவித நடவடிக்[...] எடுக்காததை அடுத்து [...] உயர்நீதிமன்றத்தில் முறை[...] செய்திருந் தார்.

இதனைத் தொடர்ந்து [...] பாட்டை விசாரணை செய்த [...] நீதிமன்ற நீதியரசர் கனகராஜ்[...] யில் இருந்தவாறு வானொலி[...] கேட்பதற்கு வை. கோவுக்கு[...] மதி வழங்கினார்.



நேற்று நடை[...] ற படை [...] களுக்கான [...] ருது வழ[...] வைபவத்[...] ஜனாதி[...] சந்திரி[...] குமாரது[...] விருதினை[...] ங்குவதை[...] த்தில் க[...] லாம்.

---

# கேள்வி அறிவித்தல்

## பருத்தித்துறை நகராட்சி மன்றம்

கீழ் குறிப்பீடப்படும் வேலைகளுக்கான கேள்விப்படிவங்கள் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில்

அட்டவணையில் காட்டப்பட்டுள்ள உரிய கேள்வி வைப்புப் பணம், கேள்விப்பத்திரப் பணம், ப.சே.வரி செலுத்துவதன் பேரில் 2002ம் ஆண்டு ஆவணி மாதம் 14ந் திகதி பிற்பகல் 3.00 மணி வரை வழங்கப்படும்.

பூர்த்தி செய்த கேள்விப்பத்திரங்கள் 2002ம் ஆண்டு ஆவணி மாதம் 16ந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்பு பதிவு அஞ்சல் மூலமோ அல்லது கேள்விப் பெட்டியிலிடுவதன் மூலமோ ஒப்படைத்தல் வேண்டும். கேள்விக்கான கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பீடப்படல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் 2002ம் ஆண்டு ஆவணி

காரணம் எவையும் காட்டப்படாது எக் கேள்வியையும் ஏற்க அல்லது நிராகரிக்க கேள்விச் சபைக்கு அதிகாரமுண்டு.

| வேலை விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|
| 01. கனையன் தோட்ட வீதி | 250/= | 1250/= |
| 02. தம்பசெட்டி மதகு | 250/= | 2000/= |
| 03. ஐயனார் கலட்டி வீதி | 250/= | 2000/= |

மேலதிக விவரங்களை பருத்தித்துறை நகராட்சி மன்ற அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ந.சிவபாலதருமகுலசிங்கம்
செயலாளர்,
நகராட்சி மன்றம், பருத்தித்துறை.

நா.மணிவண்ணன் ஜே.பி.யு.எம்
உப - தலைவர்
நகராட்சி மன்றம், பருத்தித்துறை.

நகராட்சி மன்ற அலுவலகம்,
பருத்தித்துறை

[C/4775]

---


சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட சுத்தமா[...]
நல்லெண்ணெய்
V.S.P. லஞ்ஓயில்
தயாரிப்பாளர்:
பரிமளா ஸ்ரோர்ஸ்
26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
[C/4243]


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.07.2002ல் அச்சிட்டு வெளியிட[...]